பக்கங்கள் 30

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 26 ஞாயிற்றுக்கிழமை 11.08.2024 | அதிர்வு 009

## வடிவேல் சுரேஷ் ரணிலுக்கு ஆதரவு



வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வுக்கு தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆதரவளிக்கும் 05▶

# பெரு வெற்றி எமக்கு உறுதி

## சஜித் நம்பிக்கை



"ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி மாபெரும் வெற்றிய டையும். தோல்வியடைந்த வேலைத்திட்டங்கள் எமது அரசின் கீழ் வெற்றி யளிக்கும் திட்டங்களாக மாற்றமடையும்."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக் கள் சக்தியின் தலை வரும் அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரு மான சஜித் பிரேம தாஸ தெரிவித்தார். 05▶

# மஸ்கெலியாவில் கோர விபத்து! இருவர் சம்பவ இடத்திலேயே பலி!!

## மேலும் இருவர் படுகாயம்



(நமது நிருபர்கள்)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பகுதியில் ஓட்டோவும், சிறிய ரக லொறியும் நேருக்கு நேர் மோதி விபத் துக்குள்ளாகியதில் ஓட்டோவில் பய ணித்த இருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளனர்.

மேலும் இருவர் படுகாயமடைந்து மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்ட பின்னர், மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா ஆதார வைத் தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மஸ்கெலியா நல்லதண்ணி பிர தான வீதியில் மஸ்கெலியா பிர வுன்லோ தோட்டப் பகுதியில் நேற்று மாலை 3.30 மணியளவில் 05▶



இலங்கைத் தமிழ ரசுக் கட்சியின் இன் றைய மத்திய குழு கூட் டம் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. வவு னியாவில் இன்று பகல் இந்தக் கூட்டம் நடை பெறுகிறது.

கட்சியின் கிழக்கு மாகாணப் பிரமுகர், முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் அரியநேத்திரன் கட்சி யின் அனுமதியின்றி, பிற கட்சிகள் அமைப் புகளின் ஏற்பாட்டில், வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராகக் களமிறங்க முன்வந்துள்ள நிலையில், பொது வேட்பாளர் குறித்துத் தமிழரசுக் கட்சி இன்று தீர்க்கமான ஒரு முடிவை எடுக்க வேண்டிய கட்டத்துக்குள் வந்திருக்கின்றது.

பொது வேட்பாளராக களமிறங்க முன் வந்துள்ள அரியநேத்திரனும் மத்திய குழு உறுப்பினர்தான். இன்று அவர் கூட்டத் திற்குப் போவாரா, தமது முடிவை கூட்டத்தில் உறுதியாக நின்று எடுத்துரைத்துத் தன் பக்க நியாயங்களை நிலைநிறுத்துவாரா என்பது தெரியவில்லை. 05▶




# சர்வதேச நிறுவனங்களுடன் இணைவதற்காக பலவீனமான ஒப்பந்தங்களை ஏற்க முடியாது

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

"நாட்டின் பொருளாதாரம் சுருங்கியுள்ளதன் காரணமாகவே அத்தியாவசிய பொருள்களுக்கான வரிசைகள் இல்லாமல் போயுள்ளன. மாறாக மக்களின் சுமைகள் குறைக்கப்படவில்லை. சர்வதேச நிதி நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்பதற்காக, பலவீனமான ஒப்பந்தங்களை ஏற்றுக் கொள்ள முடியாது."

– இவ்வாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மொனராகலை மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற பௌத்த பிக்குகள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

"சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தைத் தொடர்ந்தும் முன்கொண்டு செல்லாவிட்டால் மீண்டும் வரிசை யுகம் ஏற்படும் சில தலைவர்கள் கூறிக் கொண்டிருக்கின்றனர். பொருளாதாரம் மங்கியுள்ளதன் காரணமாகவே வரிகளும் நீக்கப்பட்டுள்ளன. மக்களின் வாழ்க்கை முறைமையும் சுருங்கியுள்ளது. நாட்டின் பொருளாதார வேகமும் வீழ்ச்சியடைந்துள்ளது.

மக்களால் அவர்களது தேவைக்கு ஏற்ப கொள்வனவு செய்ய முடியாத நிலைமை காணப்படுகிறது. உற்பத்தியும் செய்யப்படுவதில்லை. மக்களுக்கு மீதப்படுத்துவதற்கு எதுவும் இல்லை. பொருளாதாரத்தைச் சுருக்கி வறுமையை அதிகரித்து மக்கள் மீது சுமைகளைச் சுமத்தி எவருக்கும் வரிசைகளை இல்லாமல் செய்ய முடியும்.

மக்களுக்குச் சிறந்த வாழ்க்கையுடனேயே வரிசை யுகத்தை நிறைவு செய்ய வேண்டும். சர்வதேச நிதி நிறுவனங்களுடன் இணைந்து வேலை செய்ய வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் அவற்றுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்பதற்காகப் பலவீனமான ஒப்பந்தங்களை எம்மால் அனுமதிக்க முடியாது.

சமூகத்தில் பொருளாதாரம் ஸ்திரமடைந்துள்ளதாகக் கூறுகின்றனர். ஆனால் மக்களின் கைகளில் பணம் இல்லை. உற்பத்தி, விநியோகம், பாவனை, ஏற்றுமதி, இறக்குமதி என அனைத்தையும் நிறுத்திவிட்டு ஸ்திரமடைந்து விட்டதாகக் கூறுகின்றனர். எம்முடன் தொழிநுட்பக்குழு இருக்கிறது. அந்த குழுவுடன் இணைந்து நாட்டுக்கு நன்மை தரக்கூடிய மக்களின் சுமைகளைக் குறைக்கும் ஒப்பந்தத்தில் கையை முத்திட தயாராகவுள்ளோம். புதிய ஒப்பந்தத்துக்குச் சென்று மக்களின் சுமைகளைக் குறைப்போம்."– என்றார்.

# மதுப் போத்தல்களின் ஸ்டிக்கர்களில் மாற்றம்

மது போத்தல்களுக்கு தற்போது பயன்படுத்தப்படும் பாதுகாப்பு ஸ்டிக்கர்கள் மாற்றப்படவுள்ளன என மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியிலிருந்து இந்தச் செயற்பாடு அமுலுக்கு வரவுள்ளதாக மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் எம்.ஜே.குணசிறி தெரிவித்துள்ளார்.

இதனூடாக தற்போது பயன்படுத்தப்படும் ஸ்டிக்கர்களில் ஏற்பட்டுள்ள சிக்கல்களைத் தவிர்க்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, மேற்படி ஸ்டிக்கர்களில் உள்ள குறியீடுகள் மாற்றப்படவுள்ளன.

பாதுகாப்பு நோக்கத்திற்காக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.






# ஜனாதிபதி ரணில் தலைமையிலான அரசாங்கம் நிச்சயம் தோற்றம் பெறும்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறுகின்றார்

“ஜனாதிபதி தேர்தலில் நாமல் ராஜபக்ஷ வெற்றிப் பெறமாட்டார். பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் உட்பட கட்சி ஆதரவாளர்கள் அனைவரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக உள்ளார்கள். ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தை நிச்சயம் தோற்றுவிப்போம்.”

– இவ்வாறு வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கம்பஹா பகுதியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

“வியாபாரிகளை ஜனாதிபதியாக்க வேண்டாம் என்ற கோரிக்கையைப் பொதுஜன பெரமுனவின் தலைவர்களிடம் ஆரம்பத்திலிருந்து குறிப்பிட்டோம். தம்மிக்க பெரேராவை ஜனாதிபதி வேட்பாளர் என்று குறிப்பிட்டார்கள். வேட்பாளர் அறிவிப்புக்கு முன்னர் போட்டியிலிருந்து விலகியுள்ளார்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்ஷ போட்டியிடுகிறார் எனக் குறிப்பிடப்படுகிறது. நாமல் ராஜபக்ஷ அரசியலில் கற்றுக்கொள்வதற்கு இன்னும் பல விடயங்கள் உள்ளன. அவர் பொறுமையுடன் இருக்க வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது எமக்கு அன்பு உள்ளது, அதை விடவும் நாட்டுப்பற்று உள்ளது. இதன் காரணமாகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்தோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தோற்றம் பெற்றால் மாத்திரமே பொருளாதார நெருக்கடிக்கு நிலையான தீர்வு காண முடியும் என்று நாட்டு மக்கள் குறிப்பிடுகின்றன நிலையில் பொதுஜன பெரமுன மாத்திரம் எதிர்மறையான நிலைப்பாட்டில் உள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் நாமல் ராஜபக்ஷ வெற்றிப் பெறமாட்டார். அதுவே உண்மை. யதார்த்தத்தை விளங்கிக் கொள்ள வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வெற்றி பெறச் செய்யும் செயற்பாடுகளை எதிர்வரும் வாரம் முதல் முன்னெடுப்போம். நாடளாவிய ரீதியில் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவோம்.”– என்றார்.

# தற்போது நானே தொழில் அமைச்சர் சம்பள விவகாரத்தைக் கையாள்வேன்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

“கடந்த வருடம் பெருந்தோட்டக் கம்பனிகள் கணிசமான இலாபத்தை பெற்றிருக்கின்றன. தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தொழிலாளர் சம்பள விவகாரத்தை கையாண்டார். கம்பனிகள் நீதிமன்றம் சென்றன. ஆனால் இப்போது அவர் அப்பதவியில் இல்லை. நானே தொழில் அமைச்சராக பொறுப்பேற்றுள்ளேன் ஆகவே தொழிலாளர் வேதன விவகாரத்தை நானே கையாளப்போகின்றேன்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஹட்டனில் நேற்று இடம்பெற்ற வர்த்தகப் பிரமுகர்களுடனான சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:–

“நான் தொழில் அமைச்சராக சம்பள நிர்ணய சபையின் தீர்மானங்களை அமுல்படுத்த உத்தேசித்துள்ளேன்.

நாம் முன்வைக்கும் சம்பளத்தொகையை கம்பனிகள் வழங்க முன்வராவிட்டால் அதற்கான புதிய சட்டமூலத்தை என்னால் கொண்டு வர முடியும்.

அதாவது சம்பள நிர்ணய சபையின் தீர்மானங்களை கம்பனிகள் நடைமுறைப்படுத்தாவிட்டால் அத்தொகையை



செலுத்த வேண்டும் என நான் ஒரு சட்டத்தை கொண்டு வருவேன். அதன்பிறகு கம்பனிகளால் நீதிமன்றத்தை நாட முடியாது.

குறைந்த வேதனத் திருத்தச்சட்டத்தை நான் நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வந்து நிறைவேற்றுவேன். ஆகவே அதோடு அந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப் படும்.”– என்றார்.




# ‘நெடுவூர்த் திருவிழா’ நேற்று இறுதி நாள்!

‘மீண்டும் ஊருக்குப் போகலாம்’ என்னும் தொனிப் பொருளில் நெடுந்தீவின் நிலைபேறான அபிவிருத்தியை கருத்தில் கொண்டு முன்னெடுக்கப்பட்ட நெடுவூர் திருவிழாவின் இறுதி நிகழ்வில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

உலகம் முழுவதும் பரந்து வாழும் நெடுந்தீவின் உறவுகளை ஒன்றிணைத்து பிரதேச அபிவிருத்தியினையும் உள்ளூரில் வாழும் உறவுகளினதும் வாழ்வியலை மேம்படுத்தும் நோக்கில் நெடுந்தீவில் இது முன்னெடுக்கப்பட்டது.

இந்த ‘நெடுவூர்த் திருவிழாவின்’ இறுதி நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன. நெடுந்தீவில் இம்மாதம் 4 ஆம் திகதி முதல் நேற்று வரை இந்நிகழ்வுகள் இடம்பெற்றன.

இலங்கையின் கிராம சேவையாளர் பிரிவை வரையறுக்கும், முதலாவது கிராம சேவையாளர் பிரிவை கொண்டுள்ள நெடுந்தீவானது சுமார் 15 ஆயிரம் மக்கள் வாழ்ந்த ஓர் அழகான பிரதேசமாகும்.

ஆனால் இன்று அங்கு வாழும் மக்கள் தொகை மிகக் குறைவடைந்துள்ளது. வளப்பற்றாக்குறை மற்றும் ஏனைய வசதி வாய்ப்புகள் இல்லாமை காரணமாக மக்கள் இடம் பெயர்ந்து வெளிநாடுகளுக்கும் வேறு பிரதேசங்களுக்கும் சென்றுள்ளனர்.

இதனைக் கருத்தில் கொண்டு மண்ணையும் மக்களையும் பாதுகாத்து நிலைபேறான அபிவிருத்தியை நெடுந்தீவில் ஏற்படுத்தும் பொருட்டு நெடுந்தீவு ஊரும் உறவும் அமைப்பினரால் இந்த நெடுவூர் திருவிழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட புலம்பெயர் நாட்டில் வசிக்கும் மக்கள் பங்காளிப்புடன் நெடுந்தீவு மக்களும் இணைந்து அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புடன் நெடுவூர் திருவிழா வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

இதில் விவசாய கண்காட்சி, மூலிகை கண்காட்சி, கல்வி சார்ந்த காட்சி, உள்ளூர் உற்பத்தி, பாரம்பரிய விளையாட்டுக்கள், பாரம்பரிய உணவு கொண்டாட்டங்கள், புத்தக வெளியீடு, உட்கட்டுமான அபிவிருத்தி தொடர்பான தளங்களைப் பார்வையிடல், சுற்றுச்சூழல் கண்காட்சிகள், முத்தமிழ் கலை நிகழ்வுகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட சிறுகதை, கட்டுரை, கவிதைஓ போட்டிகள் பரிசளிப்பு என்பன இடம்பெற்றன.
















# தேர்தல் தொடர்பில் 269 முறைப்பாடுகள் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிக்கிறது!

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய சம்பவங்கள் தொடர்பில் இதுவரையில் 269 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்தில் 186 முறைப்பாடுகளும் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்தில் 80 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதில், தேரதல் சட்டத்தை மீறியமை தொடர்பில் 266 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொதுவாகவே தமிழரசு மத்திய குழுவில் பொது வேட்பாளர் திட்டத்திற்கு வரவேற்பு இல்லை என்ற நிலையில் இன்றைய மத்திய குழுக் கூட்டத்தை அரியநேத்திரன் தவிர்க்க கூடும் என்று நம்பப்படுகின்றது.

பொது வேட்பாளருக்கு ஆதரவு தேடி நேற்றுக் கிளிநொச்சியில் நடைபெற்ற கருத்தாய்வுக் கூட்டத்தின் பின்பலத்தில் தமிழரசுக் கட்சியின் பிரமுகர் சிறிதரனே பிரதான கை என்று கூறப்படும் நிலையில் அதை ஒட்டிய விடயங்களும் இன்றைய கூட்டத்தில் ஆராயப்படக் கூடும்.

கட்சிக்கு எதிரான வழக்கு பற்றிய விடயங்களை ஒட்டியும் இன்று கட்சியின் மத்திய குழுவில் பிரஸ்தாபிக்கப்படும் என எதிர்பார்க்கலாம்.

இதற்கிடையில் –

நேற்றுக் கிளிநொச்சியில் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாக நடத்தப்பட்ட கூட்டம் அறிவிக்கப்பட்ட ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தை ஒட்டிய ஒரு நிகழ்வாகவே கணக்கிடப்படுகிறது.

இந்த நிகழ்வுக்கான அழைப்பிதழ்கள் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் றப்பர் ஸ்டாம்ப் முத்திரையுடன் நாடாளுமன்றத்தின் இலவச அஞ்சல் முத்திரைகளை ஒட்டி அஞ்சல் செய்யப்பட்டிருக்கின்றன.

தேர்தல் ஒன்று அறிவிக்கப்பட்ட பின்னர் இப்படி நாடாளுமன்ற அஞ்சல் முத்திரை, நாடாளுமன்ற பதவி நிலை ரப்பர் ஸ்டாம்ப் ஆகியவற்றை பயன்படுத்தி தேர்தல் பிரச்சார ஆவணங்கள், தேர்தல் அறிவித்தல் போன்றவற்றை அஞ்சல் செய்வது தேர்தல் விதிமுறை மீறல் குற்றமாகக் கருதப்படலாம் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் முன்னெச்சரிக்கை தந்துள்ளன. இது தொடர்பில் உள்ளக ரீதியான விசாரணைகள் வெளியே தெரியாமல் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் தகவல் கிடைத்துள்ளது.

விடயம் மலிந்தால் சந்தைக்கு வரும். அப்போது மேல் விவரங்களைத் தரக்கூடியதாக இருக்கும்.

+ + +

மொட்டுக் கட்சியின் தீர்மானத்தை மீறி ஜனாதிபதி ரணில் விக்க்க்ரமசிங்கவை ஆதரிக்கத் தீர்மானித்துள்ள மொட்டுக் கட்சியினர் இனி கட்சிக்குள் தங்களுக்கு இடமில்லை என்ற யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு, தமக்கு இடையே – தங்களுக்கென – தனிக்கட்சி ஒன்றை புதிதாக ஆரம்பிக்க முடிவு செய்து இருக்கின்றார்களாம்.

கண்டியில் நேற்று நடைபெற்ற ஒரு கூட்டத்தில் இந்தத் தகவலை ராஜபக்ஷக்களின் முன்னாள் வலதுகரமான மஹிந்தானந்த அழுத்கமகே தெரிவித்திருக்கின்றார்.

'ஆயிரம் மலர்கள் மலரட்டுமே!' என்பது போல ஆயிரம் கட்சிகள் தோன்றட்டுமே...!

## வடிவேல் சுரேஷ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என அந்தச் சங்கத்தின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

ஹட்டனில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டார்.

சாதி பேதமின்றி பெருந்தோட்ட மக்கள் உட்பட நாட்டு மக்களுக்கு அளப்பரிய சேவையை ஆற்றி வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பெருந்தோட்ட மக்கள் உறுதுணையாக இருப்பார்கள் என்றும் வடிவேல் சுரேஷ் எம்.பி. மேலும் கூறினார்.

## பெருவெற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அம்பாந்தோட்டை — வீரகெட்டிய பகுதியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில்உரையாற்றும்போதேஅவர்மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"அம்பாந்தோட்டையில் சர்வதேச தரத்திலான துறைமுகம் உள்ளது. சர்வதேச விமான நிலையம் உள்ளது. சர்வதேச மாநாட்டு மண்டபம் மற்றும் சர்வதேச தரத்திலான விளையாட்டு மைதானமும் உள்ளது. இவையனைத்தும் வெளிநாட்டுக் கடன்களைப் பெற்று நிர்மாணிக்கப்பட்டன. இவையனைத்தும் தோல்வியடைந்த திட்டங்கள் எனக் கருதி விட்டுவிட முடியாது. அவை, ஐக்கிய மக்கள் சக்தியின் அரசில் வெற்றி நோக்கிக் கொண்டு செல்லப்படும்." – என்றார்.

## மஸ்கெலியாவில் கோர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நல்லதண்ணியிலிருந்து மஸ்கெலியா நோக்கி பால் ஏற்றிச் சென்ற லொறியும், மஸ்கெலியாவிலிருந்து நல்லதண்ணியை நோக்கி அதிவேகமாகச் சென்ற ஓட்டோவுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# நமது கருத்து

## நீதிமன்றைத் திருத்துங்கள்!

கட்சி தாவும் அரசியல்வாதிகளின் போக்குக் குறித்துத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க கவலை தெரிவித்திருக்கின்றார்.

“பிற்பகலில் ஒரு கட்சியில் இருக்கின்றார்கள். அன்றிரவு வேறொரு கட்சியில் இணைகின்றார்கள். அடுத்த நாள் காலையில் பார்த்தால் பிறிதொரு கட்சியில் சேர்ந்து விடுகிறார்கள்'' - என்று விசனம் தெரிவித்திருக்கின்றார் அவர்.

கடந்த வியாழனன்று மல்வானையில் பேசிய அவர், “கட்சி மாறுவதற்கு இதுதான் கடைசிக் காலம். தேசிய மக்கள் கட்சியின் அரசில் அதற்கு முடிவு கட்டப்படும். கட்சி மாறினால் எம்.பிக்கள் பதவி இழக்கும் வகையில் சட்டம் கொண்டு வரப்படும்'' - என்று உறுதி அளித்திருக்கின்றார் அவர்.

அப்படி மொட்டையாக சட்டம் கொண்டு வருவது ஒரு வகையில் ஜனநாயகத்துக்கு எதிரான எதேச்சாதிகாரம் ஆகிவிடும்.

தேர்தலில் வெற்றி பெறும் கட்சிகளின் அடாவடித்தனங்கள் எல்லை மீறவும், அடுத்த தேர்தல் வரை அவற்றைக் கட்டுப்படுத்த வாய்ப்பே இல்லாத எல்லை மீறலுக்கும் அது வழி செய்து விடும் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.

நீதி, நியாயமான - ஜனநாயக ரீதியான - அர்த்தமுள்ள - காரணங்களுக்காக கட்சிகளில் இருந்து முறையாக வெளியேறவும், இன்னொரு கட்சியில் சேரவும் எம்.பிக்களுக்கு உரித்து இருக்க வேண்டும் என்பதை நாம் அடியோடு மறுத்து விட முடியாது.

இதில் இரண்டு பக்கங்கள் உள்ளன. கட்சிகளின் நிலைப்பாடு உள்ளது. அதன் அங்கத்தவர்களின் பங்களிப்பும் உண்டு.

அப்படியாயின் இவற்றுக்கு இடையில், முறையற்ற கட்சி மாறல்களை - பதவிகளுக்காக ‘பல்டி' அடிக்கும் போக்கை - நியாயமற்ற குத்து கரணங்களை - கட்டுப்படுத்துவது எப்படி என்ற கேள்வி எழுகின்றது.

அதற்கு இப்போதே சட்டத்தில் இடம் உண்டு. ஆனால் நீதித்துறையின் அசட்டைத்தனத்தால் - பொறுப்பற்ற போக்கால் - அது சரிவர நடைமுறைப்படுத்தப்படுவது இல்லை. அதையே தமக்குச் சாதகமாக அரசியல்வாதிகள் பயன்படுத்திக் கொண்டு ஜனநாயகமாக ‘பல்டி' அரசியல் நடத்துகின்றார்கள்.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கட்சி மாறினால், அவருக்கு எதிராக் கட்சி எடுக்கும் நடவடிக்கையின் நியாயத்தன்மையை நீதிமன்றத்தில் கேள்விக்கு உள்ளாக்கி உறுதிப்படுத்த, அரசமைப்புச் சட்டம் ஆக அதிகமாக மூன்று மாத கால அவகாசமே சட்ட ரீதியாக வழங்கியிருக்கின்றது. ஆனால் நீதிமன்றங்கள் - குறிப்பாக உயர் நீதிமன்றம் - அந்த கால அவகாசத்தில் வழக்கை முடிப்பதில்லை. வருடக் கணக்காக இழுத்தடிக்கின்றன. அதனைச் சாதகமாகப் பயன்படுத்தித்தான் அரசியல்வாதிகள் இப்படி ‘பல்டி' அரசியல் செய்கின்றார்கள்.

ஹரின், மனுஷ ஆகிய எம்.பிக்களின் விடயத்தில் இருவரையும் கடந்த ஆண்டு ஜூலையிலேயே ஐக்கிய மக்கள் சக்தி கட்சியிலிருந்து வெளியேற்றி விட்டது. ஆனால் மூன்று மாதங்களுக்குள் அந்த பிரச்சினைக்குத் தீர்வு - தீர்ப்பு - கொடுக்க வேண்டிய உயர்நீதிமன்றம் ஒரு வருடம் தாண்டித்தான் இப்போது தீர்ப்பை வழங்கியிருக்கின்றது. ஆக நீதிமன்ற தாமதத்தால் தமக்கு முறையற்றதான எம்.பி. மற்றும் அமைச்சர் பதவியை அவர்கள் 9 மாதங்களுக்கு மேல் வகித்திருக்கின்றார்கள்.

அந்தத் தவறுக்கு நீதிமன்றம்தான் - உயர்நீதிமன்றம்தான் - காரணம்.

ஆகவே இவ்விடயத்தில் சட்டம் கொண்டு வந்து சமூகத்தைத் திருத்த முன்னர், அந்தச் சட்டத்தை - நீதியை - நிலைநாட்ட வேண்டிய உயர் நீதிமன்றத்தைத் திருத்துவது தான் தலையாய பணியாக இருக்க வேண்டும்.





# என் இதயம் கனத்துவிட்டது கேரளா தனித்து விடவில்லை

## வயநாட்டில் பிரதமர் மோடி தெரிவிப்பு

"கேரளா தனித்து விடப்படவில்லை. வயநாடு நிலச்சரிவால் பாதிப்புகளுக்கு சாத்தியமான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு செய்யும்."

– இவ்வாறு வயநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி உறுதி அளித்துள்ளார்.

கேரளாவின் வயநாடு மாவட்டத்தில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேற்று நேரில் பார்வையிட்ட பிரதமர் நரேந்திர மோடி, வீடுகளை இழந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களைச் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்.

இதனையடுத்து, பிரதமர் மோடி தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில், கேரள ஆளுநர் ஆரிப் முகம்மது கான், முதல்வர் பினராயி விஜயன், கேரளாவைச் சேர்ந்த மத்திய இணை அமைச்சர் சுரேஷ் கோபி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில், நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிவாரண உதவிகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் பார்வையிட்டபோதும், பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்தபோதும் என் இதயம் கனத்துவிட்டது. மறுவாழ்வுப் பணிகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டிய தருணம் இது. கேரளா தனித்து விடப்படவில்லை. ஒட்டுமொத்த தேசமும் கேரள மக்களோடு இருக்கிறது. சாத்தியமான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு செய்யும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன் நீங்கள் தனித்து விடப்படவில்லை. மத்திய அரசும் கேரள அரசும் இணைந்து வயநாட்டை மீட்டுருவாக்கும் பணிகளை மேற்கொள்ளும். மறுவாழ்வுப் பணிகளுக்கு நிதி ஒருபோதும் தடையாக இருக்காது. மாநில அரசு முன் வைக்கும் அனைத்து கோரிக்கைகளையும் மத்திய அரசு நிறைவேற்றும்." – என்றார்.

முன்னதாக, கேரளாவின் வயநாடு மாவட்டத்தில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும், பாதிக்கப்பட்ட மக்களையும் பார்ப்பதற்காக விமானம் மூலம் நேற்று காலை கேரளாவின் கண்ணூர் விமான நிலையம் சென்ற பிரதமர் மோடி, பின்னர் அங்கிருந்து இந்திய விமானப்படையின் ஹெலிகாப்டர் மூலம் காலை 11.15 மணியளவில் வயநாடு புறப்பட்டார்.

வயநாடு மாவட்டத்தில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட சூரல் மாலா, முண்டக்கை, புஞ்சிரிமட்டம் ஆகிய கிராமங்களில்

தொடர்ச்சி▼



# என் இதயம் கனத்துவிட்டது கேரளா தனித்து விடவில்லை

## வயநாட்டில் பிரதமர் மோடி தெரிவிப்பு

தொடர்ச்சி▲

அவர் வான்வழி ஆய்வு மேற்கொண்டார். நிலச்சரிவை அடுத்து கல், மண் ஆகியவற்றோடு பெருக்கெடுத்து ஓடிய இருவழிஞ்சி ஆற்றையும் பிரதமர் மோடி பார்வையிட்டார்.

அப்போது, ஒவ்வொரு பகுதியிலும் ஏற்பட்ட பாதிப்பின் தன்மை குறித்து பிரதமர் மோடிக்கு விளக்கப்பட்டது. மேலும், பாதிப்புகள் குறித்த புகைப்படங்களையும் பிரதமர் மோடி பார்த்தார்.

இதனையடுத்து, தரை மார்க்கமாகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி சென்றார். வாகனத்தை விட்டு பல பகுதிகளுக்கும் நடந்து சென்ற பிரதமர் மோடி, அங்கு நிலச்சரிவால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை நெருக்கமாக ஆய்வு செய்தார். அப்போது, அங்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து பிரதமருக்கு அதிகாரிகள் விளக்கினர்.

இந்த ஆய்வை அடுத்து, நிலச்சரிவால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ள முகாம்களுக்கு பிரதமர் மோடி சென்றார். அங்கு பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார். அவர்களுக்கு ஆறுதல் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களில் சிலர் தங்கள் குறைகளை கண்கலங்கியவாறு கூறியதைக் கேட்ட பிரதமர், அவர்களின் தோல்களில் தட்டிக் கொடுத்து ஆறுதல் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து நிலச்சரிவால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை பிரதமர் சந்தித்து, அவர்களுக்கு ஆறுதல் தெரிவித்தார். பிரதமருடன் கேரள ஆளுநர் ஆரிப் முகமது கான், முதல்வர் பினராயி விஜயன், மத்திய சுற்றுலா மற்றும் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு துறை இணை அமைச்சர் சுரேஷ் கோபி ஆகியோர் உடன் சென்றனர்.

பேரிடர் பாதித்த பகுதியில் மறுவாழ்வு மற்றும் நிவாரணப் பணிகளை முழுவீச்சில் மேற்கொள்ள மத்திய அரசிடம் கேரள அரசு 2,000 கோடிரூபா நிதியுதவி கோரி இருப்பது குறிப்பிடத்தக்கது.







# சூச்சிப்பாரா அருவி பகுதியில் நான்கு சடலங்கள் மீட்கப்பட்டன

வயநாடு நிலச்சரிவு மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று கொண்டிருக்கின்றன. இந்நிலையில், வயநாட்டில் உள்ள சூச்சிபாரா அருவிக்கு அருகில் வனத் துறையினர் நடத்திய சோதனையில், நான்கு சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

மேற்படி சடலங்களை மீட்ட இராணுவ வீரர்கள் ஹெலிகாப்டர் மூலம் அவற்றை பிரேதப் பரிசோதனைக்காக கொண்டு சென்றனர்.

இதேவேளை, 10 நாள்களுக்கும் மேலாக மக்களை தேடும் பணிகள் நடைபெற்று வருகின்றன. வயநாட்டின் சூரல்மாலா மற்றும் முண்டக்கையில் ஏற்பட்ட நிலச்சரிவில் 131 பேர் இன்னும் காணவில்லை எனக் கூறப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை காலை 6 மணியில் இருந்து தேடுதல் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவம், பொலிஸ் மற்றும் வனத்துறை அதிகாரிகளும் மக்களுடன் இணைந்து கொண்டுள்ளனர்.




# இயல்பு நிலைக்கு திரும்பாத பங்களாதேஷ்: நீதிமன்றத்தை முற்றுகையிட்ட மாணவர்கள்

பங்களாதேஷில் மாணவர்கள் போராட்டம் ஆங்காங்கே நீடித்து வரும் நிலையில், தலைமை நீதிபதி ஒரு மணி நேரத்தில் தனது பதவி விலக வேண்டும் என்று மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் போராட்டமானது நேற்று முன்னெடுக்கப்பட்ட நிலையில் பங்களாதேஷ் உயர் நீதிமன்றத்தை மாணவர்கள் முற்றுகையிட்டுள்ளனர்.

இதனால், பங்களாதேஷில் மீண்டும் நேற்று பதற்றம் ஏற்பட்டுள்ளது.

பங்களாதேஷில் இடஒதுக்கீட்டுக்கு எதிரான மாணவர்கள் போராட்டம், வன்முறையாக மாறியது. இதனை தொடர்ந்து, பிரதமர் ஷேக் ஹசீனாவை பதவி விலகுமாறு போராட்டம் நடத்தியதை தொடர்ந்து அவர் நாட்டை வெளியேறியுள்ளார்.

மேலும், அவரின் பதவி விலகலை தொடர்ந்து, ஆட்சி அதிகாரத்தை அந்த நாட்டு இராணுவம் கையில் எடுத்துள்ளது. தேர்தல் நடத்தப்பட்டு புதிய ஆட்சி அமையும் வரை, நாட்டில் இடைக்கால அரசு அமைக்கப்படும் என இராணுவ தளபதி வேக்கர் உஸ் ஜமான் அறிவித்துள்ளார்.

அந்த நாட்டு சட்டப்படி ,பங்களாதேஷில் அடுத்த 3 மாதங்களுக்குள் தேர்தல் நடக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணரான முகமது யூனுஸ் தலைமையில்தான் இடைக்கால அரசு அமைய வேண்டும் என்பதில் மாணவ பிரதிநிதிகள் உறுதியாக இருந்தனர். மாணவர்களின் கோரிக்கையை ஏற்று, இடைக்கால அரசுக்கு தலைமை தாங்க முகமது யூனுசும் சம்மதம் தெரிவித்தார்.

இராணுவமும் அதை ஏற்றுக் கொண்டது. அதனை தொடர்ந்து, 84 வயது முகமது யூனுஸ், இடைக்கால அரசின் தலைவராக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

ஆனாலும் பங்களாதேஷில் இன்னும் இயல்பு நிலை திரும்பவில்லை. நேற்று உயர்நீதிமன்றத்தை முற்றுகையிட்டதன் மூலம், மீண்டும் பதற்றம் உச்சத்தை தொட்டது.









# காசாவில் வான்வழித் தாக்குதல் 100 இற்கும் அதிகமானோர் பலி

கிழக்கு காசாவில் மக்கள் தஞ்சமடைந்திருந்த பள்ளிவாசல் மீது இஸ்ரேல் நடத்திய வான் வழித் தாக்குதலில் 100 இற்கும் மேற்பட்டடோர் கொல்லப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பஜர் எனப்படும் பகல் நேர தொழுகையில் மக்கள் ஈடுபட்டிருந்தபோது நேற்று இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்த தாக்குதலில் பலர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஒரே வாரத்தில் 04 பள்ளிவாசல் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது. ஒகஸ்ட் 4 ஆம் திகதி 02 பள்ளிவாசல்கள் மீது நடந்த தாக்குதலில் 30 பேர் உயிரிழந்தனர்.

அதற்கு முந்தைய நாள் நடாத்தப்பட்ட தாக்குதலில் 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேற்படி தாக்குதல்கள், இந்த பள்ளிவாசல்களில் ஹமாஸ் கிளர்ச்சியாளர்கள் ஒளிந்திருப்பதானால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் என இஸ்ரேல் நியாயப்படுத்தியுள்ளது.



இதற்கிடையில், எதிர்வரும் ஒகஸ்ட் 15ஆம் திகதி இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.












# தோட்டத் தொழிலாளரின் சேமலாப நிதி அடுத்த வருடம் தொடக்கம் வழங்கப்படும்

## கண்டியில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

“தோட்ட தொழிலாளர்களின் ஒரு நாள் சம்ளத்தை 1,700 ரூபாயாக அதிகரிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை செயற்படுத்த 07 பெருந்தோட்ட நிறுவனங்கள் இணங்கி யுள்ளன. எதிர்வரும் திங்கள் கிழமை சம்பள நிர்ணயச் சபையை அழைத்துச் பேசி அந்த தீர்மானத்தை செயற்படுத்தத் தேவையான சட்டங்களை கொண்டுவர தயாராக இருகின் றோம். தோட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்படாமலிருக்கும் சேமலாப நிதியை பெற்றுக்கொடுப்பதற்கான பணிகளை அடுத்த வருடத்திலிருந்து முன்னெடுப்போம்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸினால் ஏற்பாடு செய்யப்பட்ட கண்டி மாவட்ட தோட்டத் தொழிலாளர் தொழிற் சங்கங்கள் மற்றும் இளைஞர் தலைவர்களுடனான சந் திப்பில் நேற்று கண்டி கரலிய மண்டபத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார, இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்த, இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ராமேஷ்வரன்,

தொடர்ச்சி▼








# தோட்டத் தொழிலாளரின் சேமலாப நிதி அடுத்த வருடம் தொடக்கம் வழங்கப்படும்

## கண்டியில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

தொடர்ச்சி▲

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அங்கத்தவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துக் கொண்டனர்.

இதன்போது தோட்ட தொழிலாளர்களின் பிரச்சினைகள் ஜனாதிபதியிடன் நேரடியாக முன்வைக்கப்பட்டமையோடு, அவற்றுக்கு ஜனாதிபதி சாதகமான பதில்களையும் வழங்கியிருந்தார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் உரையாற்றுகையில் –

“கடந்த இரண்டு வருடங்களில் இந்த நாட்டு மக்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். எப்படியோ தற்போது நாட்டின் பொருளாதாரத்தை நிலையான நிலைக்கு கொண்டு வர முடிந்துள்ளது. நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகள் முழுமையாகத் தீர்க்கப்படாவிட்டாலும், மக்களுக்கு பெருமளவு நிவாரணங்களை வழங்க முடிந்துள்ளது. அதன்படி, 2022 ஆம் ஆண்டை விட மக்கள் சுமூகமாக வாழும் நிலைமை உருவாகியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் காரணமாகவே எம்மால் அவ்வாறானதொரு நிலையை உருவாக்க முடிந்தது. எமக்கு கடன் வழங்கிய நாடுகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி உடன்பாடுகளை எட்டியுள்ளோம்.

அதன்படி 2042 ஆம் ஆண்டு வரை நாங்கள் வாங்கிய கடனை மீளச் செலுத்த வேண்டும். இந்த உடன்படிக்கைகளில் இருந்து நாம் விலகிக் கொண்டாலோ அல்லது திருத்தம் செய்ய முயற்சித்தாலோ அதன் பலன்களை இழக்க நேரிடும். அப்போது ஒரு நாடாக நாம் பழைய நிலைக்குத் தள்ளப்படுவோம். மீண்டும் வரிசை யுகம் வரும். எனவே இந்த திட்டத்தை தொடருவோமா அல்லது கைவிடுவோமா என்பதை தீர்மானிக்க வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் வெற்றி குறித்து நாம் திருப்தியடைய முடியாது. இந்தியாவைப் போல நாமும் பொருளாதார வளர்ச்சியை நோக்கிச் செல்ல வேண்டும். 2048 ஆம் ஆண்டுக்குள் அந்த விரைவான வளர்ச்சியை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

அதனால் நாட்டை பொறுப்பேற்கத் தலைவர்களை தேடப் போகிறோமா அல்லது ஒலிம்பிக் போட்டிகளில் ஓடுவதற்கு தலைவர்களை தேடுகிறோமா என்பதையும் தீர்மானிக்க வேண்டும்.

தோட்ட தொழிலாளர்களுக்கு பல வருடங்களாக ஊழியர் சேமலாப நிதி வழங்கப்படவில்லை. அவற்றை வழங்கும் பணிகள் அடுத்த வருடத்திலிருந்து ஆரம்பிக்கப்படும். நாட்டின் பொருளாதாரம் வலுவடைந்திருப்பதால் அதனை வழங்கும் இயலுமை அரசாங்கத்திற்கு கிடைக்கும்.

மேலும், கடந்த இரண்டு மூன்று வருடங்களாக தோட்ட மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏனைய பணியாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைத்தது. மேலும், விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைத்துள்ளது. ஆனால் அந்த நிவாரணத்தை தோட்ட மக்களுக்கு இன்னும் வழங்க முடியவில்லை.

தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 1,700 ரூபா சம்பளம் வழங்குவதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு 07 பெருந்தோட்ட கம்பனிகள் இணக்கம் தெரிவித்துள்ளன.

அமைச்சர் மனுஷ நாணயக்காரவுக்குப் பின்னர் அந்த அமைச்சின் பொறுப்பு ஜனாதிபதி என்ற வகையில் எனக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, எதிர்வரும் திங்கட்கிழமை சம்பளக் நிர்ணயச் சபையுடன் கலந்துரையாடி இது தொடர்பில் இணக்கப்பாட்டுக்கு வரவும் அங்கு மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை சட்டமாக்கவும் முயற்சிகளை முன்னெடுப்போம்.

அந்தச் சட்டங்கள் கொண்டுவரப்பட்ட போது அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் பழனி திகாம்பரன் எம்.பி ஆகிய இருவரும் அதனை ஏற்றுக்கொள்வதற்கு ஆதரவளிப்பார்கள் என எதிர்பார்க்கிறோம்.”– என்றார்.









# தமிழ்ப் பொது வேட்பாளருக்குஆதரவாக கிளிநொச்சியில் நேற்று மக்கள் சந்திப்பு

'ஈழத் தமிழர் சுயநிர்ணய உரிமையில் தமிழ் பொது வேட்பாளர் வாய்ப்புகளும் வகிபாகமும்' என்ற கருத்தாய்வுக் கூட்டம் நேற்று பகல் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் சட்டத்தரணி திருமதி விஜயராணி சதீஷ்குமார் தலைமையில் நடைபெற்றது

தமிழ் மக்கள் பொதுச்சபையின் மக்கள் சந்திப்பாக இது இடம்பெற்றது. நானூறுக்கும் குறையாத பொதுமக்கள் இதில் கலந்து கொண்டார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனும் உட்பட அரசியல் பிரமுகர்களும் இதில் கலந்து கொண்டார்கள்.

காலை 10.15 மணியிலிருந்து மதியம் வரை இக்கூட்டம் இடம் பெற்றது.

கூட்டத்தின் முடிவில் மக்கள் கேள்வி கேட்க நேரம் ஒதுக்கப்பட்டது. பொதுமக்கள் ஆர்வத்துடன் கேள்விகளை கேட்டார்கள். கேள்விகளுக்கு தமிழ் மக்கள் பொதுச்சபை பிரதிநிதிகளால் விளக்கம் தரப்பட்டது.








# உற்சவ காலத் தடையை மீறி நல்லூரில் உள்நுழைந்த பிக்குகளின் வாகனங்கள்

நல்லூர் கந்தசுவாமி கோயில் ஆலய உற்சவ காலத்தில் சுற்று வீதியில் வாகனங்கள் நுழைய தடை செய்யப்பட்டுள்ள நிலையில் சில பிக்குகள் வாகனத்துடன் நுழைந்தமையால் சர்ச்சை எழுந்துள்ளது.

நல்லூர் கந்தசாமி கோவில் பெருந் திருவிழா காரணமாக வாகன போக்குவரத்துகளை தடை செய்யும் வீதி தடைகளையும் மீறி நல்லூர் கந்தசாமி ஆலய முன்பக்கம் வரை பௌத்த பிக்குகளின் வாகனம் உள் நுழைய அனுமதிக்கப்பட்டுள்ளது.

சாதாரண பொது மக்களின் வாகனங்களை திருப்பி அனுப்புகின்ற பொலிஸார், பிக்குகளின் வாகனத்தை உள்நுழைய அனுமதித்தமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.






# ஆஸ்திரேலியாவில் தமிழ் ஏதிலிகள் 24 மணிநேர தொடர் போராட்டம்!

ஆஸ்திரேலியாவில் நிரந்தர வதிவிட உரிமை வழங்கக் கோரி பதின்னான்கு வருடங்களாக காத்திருக்கும் ஏதிலிகள் ஒன்றிணைந்து கடந்த 6 ஆம் திகதி தொடக்கம் ஆஸ்திரேலிய உள்துறை அமைச்சர் ரொனி புரூக்கின் அலுவலகத்திற்கு முன்பாக 24 மணிநேர தொடர் போராட்டம் ஒன்றை நடாத்தி வருகின்றார்கள்.

2009 ஆம் ஆண்டுகளின் பின்னர் தமது சொந்த மண்ணில் வாழ நிர்க்கதியற்று ஆஸ்திரேலியாவிற்குப் புலம்பெயர்ந்துள்ள தமிழ் ஏதிலிகள் கடந்த 12-14 வருடங்களாக நிரந்தர வதிவிட உரிமை வழங்கப்படாது தொடர்ந்தும் அந்நாட்டு அரசாங்கத்தினால் தாம் வஞ்சிக்கப்படுகின்றனர் என்ச்க் கூறுகிறார்கள்.

தமது சொந்த நாட்டிற்கு மீளத்திரும்ப முடியாத உயிர்ப் பாதுகாப்பின்மை ஒருபுறம், புகலிடக்கோரிக்கைகள் மறுக்கப்பட்டு நிரந்தர வதிவிட உரிமையற்ற அங்கலாய்ப்பும் தமது குடும்ப உறுப்பினர்களோடு சேர்ந்து வாழ முடியாத கையறு நிலையுமாக தொடர்ச்சியான உளச்சிதைவுகளால் இவர்கள் துவண்டு போயிருக்கின்றார்கள் .

போராட்டமே வாழ்வாகிப் போன தாம் வேறு வழிகளன்றியே இந்த அமைதி வழியிலான போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர் எனவும், தமக்கு நிரந்தர விசா வழங்கப்படும் வரையிலும் தாம் தமது போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை எனவும் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் கூறுகின்றார்கள்.

எனவே இப்போராட்டம் வெற்றியளித்து தமக்குரிய வாழ்வுரிமை கிடைப்பதற்காக ஆஸ்திரேலியா சிட்னியில் உள்ள அனைவரினதும் ஒத்துழைப்பினையும் வேண்டுவதோடு தமது போராட்டக்களத்திற்கு அனைவரையும் அணிதிரண்டு வந்து உறுதுணையாக நிற்குமாறும் வேண்டுகோள் ஒன்றினையும் முன்வைக்கின்றார்கள்.

ஆஸ்திரேலியாவில் தற்போது நிலவிவரும் குளிர் காலத்தினையும் பொருட்படுத்தாது தொடர்ச்சியாக 24 மணி நேரமும் இப்போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.














# அரியம்: பாக்கியமா, பலியாடா?!

நீண்ட நெடிய தேடுதல்களுக்குப் பின்னராக தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான பாக்கியசெல்வம் அரியநேத்திரன் (அரியம்) அறிவிக்கப்பட்டிருக்கிறார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இரு தடவைகள் பதவி வகித்த அவர், தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினராவார். யாழ்ப்பாணத்திலுள்ள தந்தை செல்வா கலையரங்கில் கடந்த வியாழக்கிழமை பொதுக் கட்டமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் ஜனாதிபதி வேட்பாளராக அரியநேத்திரன் அறிமுகப்படுத்தப்பட்டார். அந்த அறிவிப்பு வெளியானதும், சமூக ஊடகங்களில் யாழ். மையவதிகளினால் கிழக்கில் இருந்து இன்னொரு பலியாடு களமிறக்கப்பட்டுள்ளதாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இன்னும் சிலர், ‘சுந்தரா ட்ராவல்ஸ்’ திரைப்படத்தில் முரளி – வடிவேலு கூட்டு போண்டா மணியை மணமகனாக அலங்கரித்து முன்னிறுத்தும் படத்தை வெளியிட்டு, அரியநேத்திரனின் அறிமுகத்தோடு ஒப்பிட்டு நையாண்டி செய்திருந்தார்கள்.

தமிழ்த் தேசியப் பற்றாளராகவும், ஊடகவியலாளராகவும் இருந்த அரியம், தேர்தல் அரசியலுக்கு விடுதலைப் புலிகளின் அனுசரணையோடு வந்தவர். 2004ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் அவர் நேரடியாக வெற்றிபெறாத போதிலும், கிங்ஸ்லி இராசநாயகம், தன்னுடைய பதவியை இராஜினாமாச் செய்ததும், அந்த இடத்துக்கு கூட்டமைப்பினால் நிரப்பப்பட்டவர். அதிலிருந்து கிட்டத்தட்ட 10 ஆண்டுகள் அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறார். அதுவும், மட்டக்களப்பில் கருணா – பிள்ளையான் குழுவின் தொடர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் அவர், தமிழ்த் தேசிய அரசியல்வாதியாக நின்றவர். இறுதிப் போர் வெற்றிக்குப் பின்னராக காலத்தில் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து இணைந்து கொண்டிருந்த போது, “போனா வருவீரோ, வந்தா இருப்பீரோ...” என்று தன்னுடைய நாடாளுமன்ற உரையொன்றில் அரியம் பாடிய தமிழ்த் திரைப்படப் படலொன்று மிகப் பிரபலமானது. ஆனால், அவர், 2015க்குப் பின்னரான காலத்தில் அரசியல் அதிகார பதவிகளை இழந்தார். தற்போது தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் என்ற அளவில் மாத்திரமே இருக்கிறார்.



புருஜோத்தமன் தங்கமயில்

தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு வவுனியாவில் இன்று கூடவுள்ளது. அந்தக் கூட்டத்தில் அரியத்தின் மத்திய குழு உறுப்பினர் பதவி பறிக்கப்படும் வாய்ப்பு உண்டு.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளர் ஒருவர் முன்னிறுத்தப்பட்டு, தமிழ் வாக்குகள் ஒருங்கிணைக்கப்பட வேண்டும், அதன்மூலம் சர்வதேசத்துக்கு செய்தி சொல்லப்பட வேண்டும் என்பது, தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பினரின் எதிர்பார்ப்பு. அதற்காக அவர்கள் வேட்பாளர் ஒருவரை கண்டடைவதற்காக பாரிய முயற்சிகளை மேற்கொண்டார்கள். பொதுக் கட்டமைப்பினரை ஆதரித்த பலரும், வேட்பாளராக மாறுவதற்கு தயாராக இல்லை. ஏன், பொதுக் கட்டமைப்பிலுள்ள கட்சிகளே தயாராக இல்லை. அதிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களோ, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களோ தங்களின் அரசியல் எதிர்காலம் கருதி, ஜனாதிபதி வேட்பாளராவதில் இருந்து ஒளித்து ஓடினார்கள். இன்னொரு பக்கம், தேர்தலில் போட்டியிடுவதற்கு கட்சிகளை வழங்கவும் தயாராக இல்லை. இதனால், பொதுக் கட்டமைப்பினர் மீதான நெருக்கடி அதிகரித்தது. அவர்களுக்கு முன்னால், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைத் தேடுவதுதான் இறுதி வழியென்ற நிலை உருவானது. அத்தோடு, தங்களின் சொல் பேச்சை மாத்திரம் கேட்பவராகவும் அவர் இருக்க வேண்டும் என்ற வரையறையும் இருந்தது. அதனால்தான், வேட்பாளராக அரியம் தெரிவாகும் நிலை வந்தது.

வேட்பாளர் தெரிவில் இறுதியாக அரியத்தோடு தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த இன்னொரு மத்திய குழு உறுப்பினரின் பெயரும் சம்பந்தப்பட்டவரின் அனுமதியோடு ஆலோசிக்கப்பட்டது. ஆனால், சம்பந்தப்பட்ட உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினராக ஒருபோதும் பதவி வகித்தவர் அல்லர் என்பதால், அவர் போட்டியிடுவதானால் கட்சியொன்று அவசியம். ஆனால், பொதுக் கட்டமைப்பின் கட்சிகள் எவையும், தங்களது கட்சியை வழங்க முன்வராத நிலையில், சம்பந்தப்பட்டவர் தெரிவாகும் வாய்ப்பும் அற்றுப்போனது. அதனால்தான், அரியம் ஜனாதிபதி வேட்பாளரானார். அவரும் இல்லை

தொடர்ச்சி▼



# அரியம்: பாக்கியமா, பலியாடா?!

**தொடர்ச்சி▲**

யென்றால், பொதுக் கட்டமைப்பினர், எம்.கே. சிவாஜிலிங்கத்தை தேடிச் சென்றிருக்க வேண்டி வந்திருக்கும். அவர் ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிட்ட அனுபவம் உள்ளவர். ஆனால், அந்த நெருக்கடி நிலையை, அரியம் பொதுக் கட்டமைப்பினருக்கு, குறிப்பாக அந்தக் கட்டமைப்பிலுள்ள அரசியல் பத்தியாளர்களுக்கு வழங்கவில்லை. அந்த வகையில் பத்தியாளர்களுக்கு அரியம் பாக்கியம் செய்திருக்கிறார்.

தமிழ்த் தேசிய அரசியலின் செல்நெறி மீது தமிழ் மக்கள் பெருமளவில் அதிருப்தியடைந்திருக்கிறார்கள். அந்த அதிருப்தியைக் களைந்து, நம்பிக்கையின் பக்கம் நகர்த்தி, தமிழ்த் தேசிய அரசியலைப் பலப்படுத்த வேண்டும். அதற்கு தமிழ் மக்களை ஒன்று திரட்டுதல் என்பது அவசியமானது. அதில் மாற்றுக் கருத்துக்கள் ஏதும் இல்லை. ஆனால், அந்தக் காரணத்தைச் சொல்லிக் கொண்டு பொது வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும் தரப்பினர், அதற்கான அர்ப்பணிப்பை முழுவதுமாக வழங்க வேண்டும். அதற்கு மாறாக, 'வேண்டா வெறுப்பாக பிள்ளையைப் பெற்று, அதற்கு காண்டாமிருகம் என்று பெயர் வைத்தது' போல, நடந்து கொள்ள முடியாது. பொதுக் கட்டமைப்பிலுள்ள கட்சிகளின் நிலைப்பாடுகளைப் பார்க்கும் போது, அப்படித்தான் தோன்றுகின்றது. 'தமிழ்ப் பொது வேட்பாளர்' என்ற அடையாளத்தோடு ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் பொதுக் கட்டமைப்பினர் வேட்பாளராக முன்னிறுத்தும் போது, அதற்கான முக்கியத்துவத்தை வழங்கியாக வேண்டும். அவரின் அறிமுகம், பொதுக் கட்டமைப்பின் அனைத்துத் தரப்பினதும் பங்களிப்போடு, பெரும் சமூக – ஊடக கவனம் பெறும் அளவுக்கு பிரச்சார உத்திகளோடு முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அரியத்தின் அறிமுகத்தின் போது, பொதுக் கட்டமைப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்கிற கட்சிகளான ரெலோ, புளொட், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியவற்றின் தலைவர்கள் யாரும் கலந்து கொண்டிருக்கவில்லை. அவர்கள், நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்து கொண்டிருக்கின்றனர் என்று கூறப்பட்டது. வெளிநாட்டு தூதரகங்கள், உள்ளக – அயலக பாதுகாப்புப் பிரதானிகள், இராஜதந்திரிகள் என்று எந்த தரப்பு அழைத்தாலும் எந்தவித கேள்வியும் இன்றி, ஓடோடிப்போய் சந்தித்து விட்டு வரும், இந்தக் கட்சிகளின் தலைவர்கள், தாங்கள் முன்னிறுத்தும் வேட்பாளர் அறிமுகத்தை நாடாளுமன்ற அமர்வுகளைக் காட்டி புறக்கணித்தமை அபத்தத்தின் உச்சம். அது, போக்கிடமின்றி அமைந்த கூட்டின் பங்காளிகள் தாங்கள் என்ற அவர்களின் எண்ண ஓட்டத்தை மக்களிடம் வெளிப்படுத்தியது. அரியம் வேட்பாளராக அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டவர்களின் உடல்மொழி, அவர்களின் அரசியல் நிலைப்பாடுகளை தீர்க்கமாக வெளிப்படுத்தும் அளவுக்கு இருக்கவில்லை. அவர்கள், மனதளவில் சோர்ந்து போய் இருப்பதை, முகங்கள் அப்பட்டமாகக் காட்டின. அதிலும், உடல்மொழி, பேச்சாளர்களின் மனோ நிலை தொடர்பில் எல்லாம் கடந்த காலங்களில் பகுத்தாய்ந்து எழுதிய பத்தியாளர்களின் முகங்களே பெரும் சோர்வாக காணப்பட்டன. அந்த முகங்களில், ஒரு மாதிரியாக ஒருவரை வேட்பாளராக அறிமுகப்படுத்தியாகிவிட்டது என்ற ரேகைகள் படர்ந்திருந்தன. அதனைத் தாண்டி எந்த நம்பிக்கையையும் விதைக்கும் உணர்வுகள் யாரிடத்திலும் இருக்கவில்லை.

தமிழரின் தாகத்தை தீர்க்க, அரசாங்கத்திடம் மதுபானசாலைகளுக்கான அனுமதிப்பத்திரங்களை சலுகைகளாக – இலஞ்சமாக பெற்றுக் கொண்டிருக்கிறவர்கள் எல்லாம், தமிழ்த் தேசிய அரசியலை தற்போது ஆக்கிரமித்திருக்கிறார்கள். தமிழரின் தாகம் என்பதை, தண்ணீர் தாகம் என்று உணர்ந்து கொண்டாலாவது பரவாயில்லை. அரசியல் புரிதல் இல்லை என்று அவர்களை மன்னித்து புறந்தள்ளி விடலாம். ஆனால், தமிழரின் தாகத்தை, சாராய –கசிப்பு தாகம் என்று உணர்ந்து செயற்படுபவர்களை, தமிழ்ச் சமூகம் எச்சரிக்கையோடு அணுக வேண்டும். இப்படியான அறமற்றவர்களும், சமூக விரோத சிந்தனைக்காரர்களும் தமிழ்த் தேசிய அரசியலை ஆக்கிரமித்திருக்கும் போது, தமிழ் மக்கள் அரசியலில் நம்பிக்கை இழப்பது இயல்பானது. அதனை, மாற்றியமைத்து, தமிழ்த் தேசிய அரசியலை நம்பிக்கையின் பக்கத்திற்கு நகர்த்துதல் என்பது, மிகப்பெரிய செயற்திட்டங்கள், அர்ப்பணிப்புக்கள் சார்ந்தது. அது பதவி, பகட்டு, பணம், இலஞ்சம், ஊழல், சலுகை சார் நிலைகளுக்கு அப்பாலானது. ஆனால், தற்போதுள்ள அரசியலில் இவற்றைக் கடந்தவர்கள் என்று பெரிதாக யாரையும் அடையாளம் காண முடியாது. முள்ளிவாய்க்காலிலும், மாவீரர் நாள்களிலும் தீப மேற்றிவிட்டால் போதும், தமிழ் மக்களின் மண்டையில் மிளகாய் அரைக்கலாம் என்பது, பல அரசியல்வாதிகளின் நிலைப்பாடு. ஆனால், அவர்களின் தென் இலங்கை அரசாங்கங்கள், கட்சிகளுடனான நெருக்கம் என்பது, மிகமோசமான அளவில் இருக்கின்றன. அது, தனிப்பட்ட ரீதியானது என்றால் பிரச்சினையில்லை. ஆனால், அது, தமிழ் மக்களை பலிகடாவாக்கும் போக்கிலானது. அப்படியானவர்களின் கரங்கள், தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் முன்னிறுத்தம் மற்றும் தெரிவிலும் முக்கிய தாக்கம் செலுத்துகின்றதா என்ற சந்தேகம் உண்டு.

இறுதி மோதல் காலத்தில் ராஜபக்ஷக்களோடு நெருக்கமாக இருந்த தமிழ் வர்த்தகர் ஒருவர், இப்போது யாழ்ப்பாணத்தில் ஊடகங்களை நடத்துவதன் மூலம், தமிழ்த் தேசியக் கட்சிகளையும் தலைவர்களையும் தன்னுடைய கைப்பாவையாக கையாள நினைக்கிறார்.

**தொடர்ச்சி▼**




# அரியம்: பாக்கியமா, பலியாடா?!

**தொடர்ச்சி▲**

அதற்கு இணங்காதவர்களை நாளும் பொழுதும் விமர்சிப்பதுதான் அவரது வேலையாக இருக்கின்றது. அவரின் நிகழ்ச்சி நிரலில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் இருந்தது. அவர் மீதான விமர்சனம் பொது வெளியில் எழுந்ததும், பொதுக் கட்டமைப்பில் இருந்து அவர் ஒதுங்கிக் கொண்டது போல, காட்டிக் கொண்டார். ஆனாலும் அவரது பிரதிநிதியாக பத்தியாளர் ஒருவர் பொதுக் கட்டமைப்புக்குள் செயற்படுகின்றார் என்ற குற்றச்சாட்டு உண்டு. அவர்களின் தெரிவும் அரியமாக இருந்திருக்கின்றது. அதற்கான காரணமாக, கேள்விகளைக் கேட்காத ஒருவராக அரியம் இருப்பார் என்பதுதான் ஒற்றை வாதம்.

அரியம், தற்போது செல்வாக்குள்ள அரசியல் வாதியல்ல. தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவு குழப் பத்தில், அவர் சிவஞானம் சிறீதரனுக்காக இயங்கியவர். அதன்மூலம் அண்மைய நாள்களில் சற்று ஊடகக் கவனம் பெற்றவர். மற்றப்படி, அவரினால் தேர்தல் – வாக்கு அரசியலில் தற்போது தாக்கம் செலுத்த முடிவதில்லை. மட்டக்களப்பிலேயே அவரினால் சில ஆயிரம் வாக்குகளைக்கூட பெற முடியாது என்பதுதான் யதார்த்தம். அப்படிப்பட்ட ஒருவரை, வடக்கு கிழக்கு பூராவும் பொது வேட்பாளராக முன்னிறுத்துவது என்பது எவ்வளவு தூரம் அனுகூலமானது என்பது, பொதுக் கட்டமைப்பின் பத்தியாளர்களுக்குத்தான் வெளிச்சம். ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் பொது வாக்கெடுப்பாக கருதி செயற்பட வேண்டும் என்ற அறிவித்தலை விடுத்துக் கொண்டு களத்துக்கு வந்த அரசியல் பத்தியாளர்கள், தற்போது பிரிந்துள்ள தமிழ் வாக்குகளை ஒன்றாக திரட்டுவதுதான் இலக்கு என்று தங்களின் கோரிக்கைகளை மட்டுப்படுத்திக் கொண்டு விட்டார்கள். ஆனாலும், அவ்வாறு தமிழ் மக்களின் வாக்குகளை ஒருங்கிணைக்கும் வல்லமை அரியத்திடம் இல்லாத போது, அவரை, ஜனாதிபதி வேட்பாளராக முன்னிறுத்துவது என்பது எதனை நோக்கிய அரசியல்?

வேட்பாளர் அறிமுக நிகழ்விலேயே கலந்து கொள்ளாத பொதுக் கட்டமைப்பின் கட்சித் தலைவர்கள், அரியத்துக்காக வாக்குச் சேகரிப்பை மனப்பூர்வமாக முன்னெடுப்பார்களா என்பது பிரதான கேள்வி. அரசியல் கட்சிகள், தொண்டர்களின் பங்களிப்பு இல்லாமல், பத்தியாளர்கள் சிலர் மாத்திரம் தமிழ் வாக்குகளை திரட்டும் வல்லமையோடு இருக்கிறார்களா என்றால், அதற்கு வாய்ப்புக்களே இல்லை. ஏனெனில், அந்தப் பத்தியாளர்களில் பலர், செம்மணி வளைவைத் தாண்டியே வெளியில் வராதவர்கள். அப்படியான நிலையில், கடந்த காலங்களில் சிவாஜிலிங்கம் ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிட்டமைக்கு மாற்றீடான தெரிவாக மாத்திரமே அரியம் இருக்கப் போகின்றார். மற்றப்படி, அவரை பொதுக்கட்டமைப்பினரின் ஜனாதிபதி தேர்தலுக்கான பலியாடாகவே தமிழ்ச் சமூகத்தின் பெரும்பான்மை மக்கள் காண்கிறார்கள். அதனை தேர்தல் முடிவுகள் பிரதிபலிக்கும்.

# பொலிஸ் விசேட பிரிவுக்கு இது வரை தேர்தல் தொடர்பாக 8 முறைப்பாடுகள்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக பொலிஸ் விசேட பிரிவுக்கு இதுவரை 8 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது.

தேர்தல் விதிமீறல்கள் தொடர்பில் 3 முறைப்பாடுகளும் தேர்தல் வன்முறைகள் தொடர்பில் 5 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன என பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டது.

பொதுச் சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியமை, வீதியொன்றுக்கு கொங்க்ரீட் போட்டமை, அரச அதிகாரிகளை அரசியல் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தியமை போன்ற தேர்தல் சட்ட விதிமீறல்கள் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என பொலிஸார் கூறுகின்றனர்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பவ்ரல் அமைப்புக்கு 68 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கு 32 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனக் கூறப்படுகின்றது.





# முரண்பட்டவர்களின் கூட்டு முடிவுரையை எட்டுமா?

'தேசமாகத் திரள்வோம்' என வீறாப்போடு புறப்பட்டு, இப்போது சுண்டெலி மனிதனாகி, மனிதன் சுண்டெலியாகிய கதையாகி வந்து நிற்கிறது – தமிழ்ப்பொது வேட்பாளர் விவகாரம்.

கடந்த 30 ஆண்டுகளாக எதையெல்லாம் செயல்படுத்த வேண்டும் என்று பக்கம் பக்கமாக எழுதிக் குவித்தவர்கள், ஆறே மாதத்தில் அவை எவையும் செயல்படுத்த முடியாதவை, வெறும் பேச்சுக்களுடனும் எழுத்துக்களுடனும் முடங்கிப் போகக் கூடியவை என்பதை அனுபவ ரீதியாக புரிந்திருக்கும் கட்டத்துக்கு வந்திருப்பர்.

எவையெல்லாம் கோட்பாடுகள் என முன்னிறுத்தினர்களோ அவற்றில் எவற்றையுமே அவர்களால் நிறைவுறுத்திக் காட்டமுடியவில்லை.

ஒரு வேட்பாளருக்கு இருக்க வேண்டிய தகுதிகள் பற்றிப் பக்கம் பக்கமாக மற்றவர்களுக்கு வகுப்பெடுத்தார்கள். அரசியல் கட்சியை சாராதவராகவும், முன்னாள் இந்நாள் அரசியல்வாதி இல்லாதவராகவும், எதிர்காலத்தில் அரசியல் செயல்பாடு செய்யக்கூடாதவராகவும் இருக்க வேண்டும்., பெண்ணாகவும் இருக்க வேண்டும் என நிபந்தனைகள் எல்லாம் விதித்தார்கள். அப்போதே பலரால் விமர்சிக்கப்பட்டது – இது சாத்தியமில்லை என்று. நாங்கள் சாத்தியப்படுத்தி காட்டுவோம் எனக் கங்கணம் கட்டினார்கள். முதிர்ச்சியற்ற எழுத்துக்களை பலரும் எழுதினார்கள். கடைசியில் நடந்தவை என்ன?

அடிப்படையில் பொது வேட்பாளரை எதிர்க்கின்ற ஒரு கட்சியிலே போய் தஞ்சமடைய வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் வந்து விட்டார்கள். அது மாத்திரமல்லர் ஏழு கட்சிகளுடன் புறப்பட்டார்கள். அதில் நான்கு கட்சிகள். பதிவு செய்யப்பட்ட சின்னத்தையும் வைத்திருக்கின்றன. அதில் மூன்று கட்சிகள் தமது கட்சிகளை தேர்தலில் போட்டியிட வழங்கவில்லை. ஏனெனில் அதுவும் இவர்களது நிபந்தனையில் ஒன்றே. இம்முறை தேர்தலில் போட்டியிடுபவர்கள் அடுத்து வருகின்ற தேர்தலில் போட்டியிடக் கூடாது என்பது. ஈ.பி.ஆர்.எல். எவ். கட்சிச் சின்னத்தை வழங்குவதற்குத் தயாராக இருந்தது. ஆனாலும் கடந்த காலத்து ஒட்டு குழு, மண்டையன் குழு என்கின்ற விமர்சனங்கள் வந்து விடும் என இந்த சிவில் பிரமுகர்கள் மறுத்துவிட்டார்கள் போலும். அதில் போட்டியிடுவதற்கு வேட்பாளராக முன்மொழிந்தவர்களும் தயங்கிவிட்டனர். ஏனைய இரண்டு முன்னாள் ஆயுத குழுக் கட்சிகளுக்கும் அதே நிலைமைதான் விக்னேஸ்வரன் நழுவி விட்டார். பாவம், பரிதாபத்துக்குரிய அரியநேந்திரன் அகப்பட்டு கொண்டார்.


வி.எஸ்.சிவகரன்

அடிப்படையிலே இந்த சிவில் பிரமுகர்களுக்கும், இந்த ஏழு கட்சிகள் எனச்சொல்லப்படுபவர்களுக்கும் இடையில் எந்தவிதமான சித்தாந்த உறவும் இல்லை. ஒருவரை ஒருவர் கடந்த காலத்தில் ஒட்டுக் குழுக்கள் என்றும், ஒட்டாத குழுக்கள் என்றும் மாறி மாறி விமர்சனம் செய்து வந்தவர்கள்தான். அவர்களுடன் சமபங்கிற்கு போனது கட்சிகளின் அரசியல் வறுமையை எடுத்துக்காட்டுகின்றது.

இப்பொழுது திடீர் நண்பர்களாகி விட்டனர். அதுவே வேடிக்கையானது.


அரியநேந்திரன் சித்தார்த்தன் பற்றி மிகக் கேவலமாக ஒட்டுக் குழு ஒன்றும், காட்டி கொடுத்தவர், கூட்டிக் கொடுத்தவர் என்றும், 'யுத்தத்தை நிறுத்தினால் புலிக்களுக்கு ஒட்சிசன் கொடுத்தது போலாகிவிடும்' என கூறியவரை கூட்டமைப்பில் சேர்ப்பதற்கு தமிழரசுக்கட்சிக் கூட்டங்களிலும் பொது வெளியிலும் பல்வேறு விதமான வாதப்பிரதிவாதங்களையும் அறிக்கைகளையும் வெளியிட்டவர் என்பது யாவருக்கும் நினைவிருக்கும். அடைக்கலநாதன் மீதும் போதைப் பொருள் கடத்தல்காரன் என்றும் விமர்சனம் செய்தவர். சுரேஷ்பிரேமசந்திரனையும் அவர் விட்டு வைக்கவில்லை. மண்டையன் குழுத் தலைவர் என்றும் எள்ளி நகையாடினவர். விக்னேஸ்வரனை சாமியார் வேலைக்கு உகந்தவர் என வாய்க்கு வந்தபடி வானளாவியளவுக்கி இகழ்ந்து தள்ளியவர். இவற்றையெல்லாம் அரிய நேந்திரன் எளிதில் மறந்திருக்க மாட்டார். இப்பொழுது தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற உடன் அது நாறல் வாய, இது நல்ல வாய் என்று வந்து நிற்கிறார் போலும். கொள்கை என்ன என்றால் தனக்குத் தெரியாதாம், ஒப்பந்தகாரன் போல் இறக்கப்பட்டுள்ளாரா?

தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதன் ஊடாக தமிழ்மீழத்தையே பெற்றுவிட்டமை போல் இறுமாப்போடு புறப்பட்ட சிவில் பிரமுகர்கள், பரிதாபத்தோடு தமது எல்லா கொள்கைகளையும் விட்டு இப்பொழுது சுயேச்சையாக அரிய நேந்திரனில் அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள். இது எப்படி நகரப் போகிறது என்று 40 நாளில் எல்லோருக்கும் புரிந்து விடும்.

இறுதி வேட்பாளர் அறிவிப்பில் அடைக்கலநாதன், சித்தார்த்தன், விக்னேஸ்வரன் ஆகிய மூவரையும்

தொடர்ச்சி▼





# முரண்பட்டவர்களின் கூட்டு முடிவுரையை எட்டுமா?

தொடர்ச்சி▲

காணவில்லை. இந்த மூவருக்கும் ரணில் மேல் கள்ளக்காதல் உண்டு. 'தேசமாக திரள்வோம்' என்றவர்கள் குறைந்த பட்சம் கையெழுதிட்ட பதினான்கு பேரின் ஐக்கியத்தைக் கூட திரட்டமுடியவில்லை.

ஆகவே இவர்கள் இந்த பொது வேட்பாளர் விடயத்தில் இரு வேறு நிலைப்பாட்டில் இருக்கிறார்கள் என பலரும் விமர்சித்திருந்தார்கள். இப்பொழுது அவர்களை விமர்சித்த அரியநேந்திரனுக்காக மேடை ஏறுவார்களா? அவ்வாறான ஒரு நிலை ஏற்படுமா? சில நாள்களில் இதற்கான பதில் கிடைத்துவிடும். அரசியலில் இது எல்லாம் சகஜமப்பா...!

கையெழுத்திட்ட 14 பேரில் 10 பேர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். அடைக்கலநாதனை தவிர வன்னியில் எவரும் இல்லை. சிவில் பிரமுகர்கள் வரிசையில் கிழக்கில் பெண்களுமில்லை. சமூக சமநீதி கேள்விக்குட்படுகிறது.

தேர்தல் பரப்புரை என்பது இவர்கள் நினைப்பது போல் இலகுவான விடயம் அல்ல. முரண்பட்ட கூட்டில் இருந்து கொண்டு தேர்தல் பரப்புரையை எப்படி மேற்கொள்ளப் போகிறார்கள்? மாவட்டத்திற்கு மாவட்டம் கூட்டத்தை போட்டு மக்களை அழைத்து வந்து உணர்ச்சி ததும்ப பேசிவிட்டால் வாக்கு கிடைத்துவிடும் என நம்பியது 2015 க்கு முந்திய தத்துவம். இப்பொழுது அது சாத்தியமில்லை.

இந்த சிவில் பிரமுகர்கள் முற்றிலும் தேர்தல் அனுபவ அறிவு அற்றவர்கள். களத்துக்கு வரும்போதுதான் அதன் வலி இவர்களுக்குப் புரியும். தொண்டர்கள் இல்லாத கட்சிகளை நம்பியதன் பயன் விளங்கும். கூட்டுத் தொகைக்கு ஏழு என்பது பெரிய இலக்கம். செயலுக்கு வரும்போது இலக்கத்தின் வலிமை இவர்களுக்கு புரியும். பரிதாபத்துக்குரிய நிலை ஏற்படும்.

இவர்கள் தாம் வைக்கக்கூடிய கொள்கை இதுவரைக்கும் என்னவென்று கூறவில்லை. அதை அடையக்கூடிய வழி எவ்விதமானது எனத் தெரிவியவில்லை. ஆனால் ஒரு குறியீட்டுக்காக வேட்பாளரை நிறுத்துகிறோம் என்கிறார்கள். அது என்ன குறியீடு? எழுபது ஆண்டுகள் இல்லாத குறியீட்டையா கண்டுபிடிக்கப் போகிறார்கள்?

கொள்கை உடையோர் குறியீட்டை ஆதரிப்பார்கள் என்கின்ற வாதத்தை முன் வைக்கிறார்கள். அப்படி என்னதான் கொள்கை வைத்திருக்கிறார்கள் என்று இதுவரைக்கும் அவர்கள் சொல்லவில்லை. வட்டுக்கோட்டை தீர்மானத்தை விடவா உயர்வான கொள்கையை வைக்கபோகிறார்கள்? அந்தக் கொள்கைக்கு மக்கள் பெரும் திரளாக வாக்களிக்காவிட்டால் இவர்களால் முன்வைக்கப்பட்ட கொள்கையின் எதிர்காலம் என்ன? அதற்குப் பொறுப்பு கூறுவது யார்? இந்த லெட்டர் பாட் கட்சிகளா? அல்லது அமைப்புகளற்ற சிவில் பிரமுகர்களா?

அந்த விளைவை எதிர் நோக்கப் போவது தமிழினம். பொறுப்புக் கூறல் இல்லாத – பொறுப்பற்ற – பிரகிருதிகள் இனத்தின் மீது தீர்மானம் எடுத்து சவாரி செய்வதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள். முகவரி அற்றிருந்த கட்சிகளும் முகாரி இராகம் பாடுகிறார்கள். எண்பதிற்கு மேற்பட்ட சிவில் அமைப்புகள் ஆதரவு எனக் கூறினார்கள். அதில் உருப்படியான ஓர் அமைப்பின் பெயரைக் கூட காணவில்லை. காவிச்சாமியார் எங்கு போனாரோ? பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தையும் காணவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கங்க ளுமில்லை. அவர்களின் இயக்குனர் இதில் இணைய அனுமதி கொடுக்கவில்லையோ தெரியவில்லை.

கேலிக்கூத்தாகப் போகின்றதா இந்தத் தமிழ்ப் பொது வேட்பாளர் விவகாரம்? வடிவேலு பாணியில் 'நானும் ஜெயிலுக்குப் போகிறேன், நானும் ஜெயிலுக்குப் போகிறேன்' என்பது போல் 'நாங்களும் வேட்பாளர் போட்டு விட்டோம்', 'நாங்களும் வேட்பாளர் போட்டு விட்டோம்' என்று குடுகுடுப்பைக்காரர்கள் போல் பேசலாம்.

மக்களின் நாடித் துடிப்பைப் புரிந்து கொண்டார்களா? கட்சிகளாகவும், அணிகளாகவும், குழுக்களாகவும், அமைப்புக்களாகவும்இ மதரீதியாகவும், சாதிய ரீதியாகவும், சந்தர்ப்பவாதிகளாகவும், நலன் விரும்பிகளாகவும், பொருள் முதல்வாத உறவுகளுடனும், நலனியல் சார்ந்த எண்ணங்களுடனும், வேலை வாய்ப்பு மற்றும் பொருளாதார அபிலாசைகளுடனும் திளைத்திருக்கின்ற சமூகக் கட்டமைப்பை கோட்பாட்டுச் சித்தாந்தத்துக்குள் ஒரு மைப்படுத்தி, வாக்களிக்கக் கோருவது என்பது இலகுவான விடயம் அல்ல.

இதில் வேட்பாளர் உட்பட பதினைந்து பேரில் எவரும் மக்கள் கவர்ச்சி உடைய (கரிஸ்மா) உள்ள தலைவர்கள் அல்லர். இவர்களை நம்பி மக்கள் வாக்களிப்பார்கள் என இவர்கள் பகல் கனவு காண்பது வேடிக்கையாக உள்ளது.

மலையகத்திலும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திலகராஜ் ஜனாதிபதி வேட்பாளர் ஆகிவிட்டார். இனித் தமிழ்ப் பொது வேட்பாளர் என்று கூற முடியுமா?

தேர்தல் பரப்புரைக்கு பல மில்லியன் ரூபா பணம் தேவை.இதை எப்படிப் பெறப் போகிறார்கள்? வெளிநாடுகளில் இருந்து உசுப்பேற்றியவர்கள் எத்தனை பேர் உதவுவார்களோ தெரியவில்லை. இந்தியாவின் நலன் விரும்பிகள் – 13 இன் உற்ற நண்பர்கள் – எப்படி அவர்கள் இந்த வேட்பாளர் விடயத்தை ஆதரித்தார்கள் என்று புரியவில்லை. இதில் ஏதோ ஒரு மர்மம் பொதிந்து காணப்படுகிறது. கிளிநொச்சி வாத்தியார் வழமை போன்று இரட்டை வேடம் போடுகிறார். இதில் வெளிப்படையாக பேசிய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கத்தை பாராட்டியே ஆக வேண்டும். அரசியலில் ஒரு தீர்க்கமான, தெளிவான, திடமான முடிவுகளைத் தெரிவிக்க வேண்டியது மக்கள் பிரதிநிதிகளின் கடப்பாடாகும்.

முரண்பட்டவர்களின் கூட்டுத் தமிழ்மக்களை முச்சந்தியில் நிறுத்திவிடுமோ எனும் அச்சம் எழுந்துள்ளது.

# பயிற்சி பெற்ற முன்பள்ளி ஆசிரியர்களுக்கு டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கப்பட்டன

## 'ஆறுதல்' - ரோட்டரி கழகம் இணைந்து செயல் திட்டம்

வடக்கு மாகாணத்தில் பயிற்சி பெற்ற முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா சான்றிதழ்கள் நேற்று வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இந்த நிகழ்வு நடைபெற்றது. ரோட்டரி கழகத்தின் அனுசரணையுடன் 'ஆறுதல்' அமைப்பினரால் பயிற்றுவிக்கப்பட்ட 337 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இதன்போது டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பிரதம விருந்தினராக நிகழ்வில் கலந்துச் சிறப்பித்தார்.

இதன்போது உரையாற்றிய கௌரவ ஆளுநர் அவர்கள் –

"குழந்தைகளை உருவாக்குவது என்பது பாரிய ஒரு பணி. ஒரு சிற்பத்தை செதுக்குவதற்கும், குழந்தைகளை உருவாக்குவதற்கும் பாரிய வித்தியாசங்கள் இல்லை. குழந்தை பிறந்தது முதல் 7 வயதுக்குள் தனக்கு தேவையான அத்தனை விடயங்களையும் கற்றுக் கொள்வதாக உளவியலாளர்கள் கூறுகின்றனர். எனவே, குழந்தைகளின் முக்கியமான காலப்பகுதியை நீங்கள் உங்களுடன் இணைத்துக் கொண்டுள்ளீர்கள். நீங்கள் ஆற்றுகின்ற பணி மிக முக்கியமானது. பல்வேறு சவால்களுக்கு மத்தியில், மிகக் குறைந்த சம்பளத்தைப் பெற்று, குடும்பச் சுமையையும் தாங்கிக் கொண்டு நீங்கள் ஒரு பாரிய பணியை செய்து கொண்டிருக்கிறீர்கள். அதற்காக வடக்கு மாகாணத்தில் பணியாற்றும் அத்தனை முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் கௌரவத்துடன் வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

உங்களுக்கான மறுசீரமைப்புகளை கல்வி அமைச்சு தற்போது மேற்கொண்டு வருகிறது. உங்களுடைய கோரிக்கைகள் தொடர்பில் கல்வி அமைச்சுடன் பல தடவைகள் நாங்கள் கலந்துரையாடி இருக்கின்றோம். புதிய கல்வி சீர்திருத்தத்தில் முன் பள்ளிகளுக்கான செயற்பாடுகள் மற்றும் உங்களை சேவையில் இணைத்துக் கொள்வது தொடர்பான பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்கின்றோம். நாட்டின் பல்வேறு மறுமலர்ச்சி திட்டங்களுக்குள் கல்வி மறுமலர்ச்சியும் ஏற்பட வேண்டும். பல்வேறு சவால்களுக்கு மத்தியில் 'ஆறுதல்' நிறுவனத்தின் ஊடாக வடக்கு, கிழக்கில் சேவையாற்றக்கூடிய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா பாடநெறி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்காக அனுசரணை வழங்கும் ரோட்டரி நிறுவனத்திற்கும் அதேபோல இந்த செயற்பாட்டை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் 'ஆறுதல்' நிறுவனத்திற்கும் வடக்கு மாகாணம் சார்பில் எமது நன்றிகளை கூறிக் கொள்கிறோம்." – எனத் தெரிவித்தார்.




# தேர்தல் ஆணைக்குழுவின் பெயரில் போலி விளம்பரம் என எச்சரிக்கை!

## சைபர் குற்றச்செயலாக இருக்கலாம் என எச்சரிக்கை

புதிய நிர்வாக ஊழியர்களை இணைத்துகொள்வதற்காக தேர்தல்கள் ஆணைக்குழு விண்ணப்பங்களை கோரியுள்ளதாக தெரிவித்து போலியான விளம்பரமொன்று பகிரப்படுவதாக இலங்கை கணினி அவசர பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தப் போலியான விளம்பரத்தை பகிர்வதைத் தவிர்க்குமாறு அதன் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சருக தமுனுபொல தெரிவித்துள்ளார்.

இதுவொரு சைபர் குற்றச்செயலாக இருக்கலாமெனவும் அதனூடாக உங்களின் தனிப்பட்ட தகவல்கள் வேறு நபர்களின் கைகளுக்கு செல்லும் அபாயம் காணப்படுவதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.





# ரணிலுடன் டீல் இல்லை என்றால் அவரை ஆதரிக்கும் பொதுஜன பெரமுனவினர் மீது நடவடிக்கை எடுங்கள்!

## ராஜபக்ஷக்களிடம் இராதாகிருஷ்ணன் எம்.பி. கோரிக்கை

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ராஜபக்ஷக்களுக்கு டீல் இல்லையெனில், ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் தொடர்பில் அந்த கட்சி நடவடிக்கை எடுக்கவேண்டும்.”

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித் துள்ளார்.

தலவாக்கலையில் நேற்று இடம்பெற்ற மலையக மக்கள் முன்னணியின் தேசிய சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர்



மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

“ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சஜித் பிரேமதாஸவிடம் தமிழ் முற்போக்கு கூட்டணி 47 கோரிக்கைகளை முன் வைத்துள்ளது.

அவற்றை சஜித் பிரேமதாஸ ஏற்றுக்கொண்டுள்ளார். அதன் அடிப்படையிலேயே அவருக்கு நாம் ஆதரவு தெரிவித்துள்ளோம்.

அந்த கோரிக்கைகளில் வீடமைப்பு காணி உரிமை, கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படவுள்ளது.”– என்றார்.







# மலையகத்தில் தமிழ் மொழி மூலமான ஆசிரியர்கள் ஆள்சேர்ப்புக்குத் தடை

## உயர்நீதிமன்றம் இடைக்காலமாக விதித்தது

பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளுக்கு ஆசிரிய உதவியாளர்களை ஆள் சேர்ப்புச் செய்வதற்கான பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வுகள் என்பவற்றுக்கு இடைக்காலத் தடைவிதித்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளுக்கு ஆசிரிய உதவியாளர்களை ஆள்சேர்ப் புச் செய்வதற்கான 2014 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானியை சவாலுக்கு உட்படுத்தி உயர்நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி னரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான பைசர் முஸ்தபாவின் சார்பில் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் உரிய அதிகாரமின்றி இந்த வர்த்த மானியை வெளியிட்டுள்ளார் என மனுதாரர்கள் தங்களது மனுவில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

சட்டத்திற்குப் புறம்பாக இலங்கை ஆசிரியர் சேவையில் ஆள்சேர்ப்பு மேற்கொள்ளும் நோக்கில் இந்த வர்த் தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ள தாகவும் மனுதாரர்கள் மன்றுரைத் துள்ளனர். இந்தநிலையில் இந்த மனுமீதான தீர்ப்பு அறிவிக்கப்படும் வரையில் மனு தாரர்கள் கோரியுள்ள சகல இடைக்கால நிவாரணங்களையும் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ளது.

இதன்படி பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள தமிழ் மொழிமூல பாடசாலைக ளுக்கு ஆசிரிய உதவியாளர்களை ஆள்சேர்ப்புச் செய்வதற்கான பரீட்சை கள், நேர்முகத் தேர்வுகள் மற்றும் செயன்முறை பரீட்சைகள் உள்ளிட்டவற் றுக்கு இடைக்காலத் தடை விதித்து உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# மதுபானத்தின் விலையை குறைப்பதற்குத் தீர்மானம்



மதுபானத்தின் விலையைக் எதிர்காலத்தில் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 750 மில்லி லீற்றர் மதுபான போத்தல் ஒன்றின் விலை 900 - 1000 ரூபாவினாலும், 175 மில்லி லீற்றர் மதுபான போத்தலின் விலை 200 ரூபாவினாலும் குறைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அண்மையில் மதுவரி திணைக்கள ஆணையாளருக்கும் மதுபான நிறுவனங்களுக்கும் இடை யில் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, மதுபான உற்பத்திக்கு அதிகம் பயன்படுத்தப்படும் ஸ்பிரிட்களின் விலை குறைந்துள்ளதால், மதுபானத்தின் விலையைக் குறைக்க வேண்டும் எனக் மதுவரி திணைக்கள ஆணையர் தெரிவித்துள்ளார்.

மதுபான போத்தல்களின் விலையில் 80 வீதம் மற்றும் 90 வீத வற் மற்றும் பிற வரிகளை உள்ளடக்கியுள்ளன என மதுபான நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

கடந்த 2023 ஜூலை முதலாம் திகதி மதுபான போத்தல்களின் விலையௌ அதிகரித்து விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றும் வெளியிடப்பட்டது.

அதன்படி அதிவிசேஷ மதுபான போத்தல் ஒன்றின் விலை 1,000 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் சின்னங்கள் தொடர்பில் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச் சைக் குழுக்களுக்கு ஒதுக்கப்படுள்ள தேர்தல் சின்னங்கள் தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரின் கையொப் பத்துடன் இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட் டுள்ளது.

வாக்காளர்களால், வேட்பாளர்களை அடையாளம் காண்பதற்கும், வாக்களிப்பு செயல்பாட்டை இலகு படுத்துவதற்கும் இவ்வாறான சின்னங்கள் ஒதுக்கீடு செய் யப்படுகின்றன.

அதற்கமைய, அங்கீகரிக்கப்பட்ட சின்னங்கள் மற்றும் அங்கீகரிக்கப்படாத சின்னங்கள் அடங்கிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் தற்போது வெளியாகியுள்ளது.





# அமோக ஆதரவுடன் சஜித் வெற்றி உறுதி

## திகாம்பரம் எம்.பி. கூறுகின்றார்

“பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதனம் தொடர்பில், பொய்யான வாக்குறுதிகளை வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிர்வரும் தேர்தலில் மக்கள் தகுந்த பதிலடியை வழங்குவார்கள்.”

– இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

ஹட்டனில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“மலையக மக்களின் அமோக ஆதரவுடன் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ வெற்றி பெறுவார்.

ஜனாதிபதித் தேர்தலில் தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணி ஆகியன சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கத் தீர்மானித்துள்ளன.



பெருந்தோட்டத்தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1,700 ரூபா பெற்றுக் கொடுக்கப்படும் என ஜனாதிபதியும், மனுஷவும் வீரவசனம் பேசினர்.

எனினும் அந்த சம்பள உயர்வு இன்னும் கிடைக்கப் பெறவில்லை. அவர்கள் இருவரும் பொய்யர்கள் என்பது உறுதியாகியுள்ளது.

சஜித் பிரேமதாஸ ஆட்சியில் காணி உரிமை ,வீட்டு உரிமை, கல்வி உரிமை என அத்தனை உரிமைகளும் கிடைக்கப்பெறும்.

முடிந்தால் மலையக மக்களின் வாக்குகளைப் பெற்றுக்காட்டுமாறு ஜனாதிபதிக்கு சவால் விடுக்கின்றேன்.”– என்றார்.









# இன்றைய ராசி பலன்கள் - 11.08.2024




இன்று சுமாரான செயல்களே நடைபெறும் சூழ்நிலை காணப்படும். உங்களுக்கு சாதகமான பலன்கள் காண நீங்கள் திட்டமிட்டு முயற்சி செய்ய வேண்டும். இதனால் சூழ்நிலை சீர்பெறும்.

உங்கள் பணியில் நன்மையான பலன்கள் காண கடினமாக போராட வேண்டும். என்றாலும் இறுதியில் வெற்றி நிச்சயம்.

உங்கள் துணையிடம் பொறுமையின்றி நடந்து கொள்வீர்கள். உறவில் நல்லிணக்கம் காண பொறுமையான அணுகுமுறை மேற்கொள்ளவேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகளை மேற்கொள்ளவேண்டியிருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். மூட்டு மற்றும் முதுகு வலியால் பாதிக்கப்படுவீர்கள். ஆரோக்கியமாய் இருக்க குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்க்கவும்.




இன்று நீங்கள் மேற்கொள்ளும் செயல்களில் பொறுமையான அணுகுமுறை தேவை. திட்டமின்றி செயலாற்றினால் இழப்புகள் ஏற்படலாம். உறுதியான அணுகுமுறை மூலம் வெற்றி கிடைக்கும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்காது. உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் காணப்படும்.

சில விஷயங்களில் உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். அனுசரித்து போவதன் மூலம் உங்கள் இருவரிடையே மகிழ்ச்சி நிலவும்.

நிதி வளர்ச்சி சுமூகமாக இருக்காது. உங்கள் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்துகொள்வது கூட கடினமாக உணர்வீர்கள்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்கள் நேர்மறை அணுகுமுறை மூலம் நீங்கள் வெற்றி காண்பீர்கள். உங்கள் அணுகுமுறையில் தைரியம் மற்றும் உறுதி காணப்படும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள்.

உங்கள் செயல்திறனில் உங்கள் திறமை வெளிப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வாரத்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே மகிழ்ச்சி நிலவும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றலும் கணிசமாகஉயரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று ஆரோக்கியத்தில் பெரிய பிரச்சினை ஏதும் இருக்காது.




உங்களுக்கு சாதகமான நாள். இன்று புதிய மனிதர்களை சந்தித்து அவர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வீர்கள். புதிய நண்பர்கள் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்களுக்கு இது ஒரு நல்ல அனுபவமாக இருக்கும்.

கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் நல்ல பலன்களை பெற்றுத் தரும். பணியில் உற்சாகம் காட்டி வெற்றி பெறுவீர்கள். உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள்.இருவரும் சேர்ந்து இனிமையான நேரத்தை கழிப்பீர்கள்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் குடும்பத்துடன் வெளியிடங்களுக்கு செல்ல பணத்தை செலவிடுவீர்கள்.




இன்று விழிப்புணர்வும் எச்சரிக்கையும் தேவை. கோவிலுக்கு செல்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற திட்டமிட வேண்டும். உங்கள் நன்மதிப்பிற்கு பங்கம் வரும் வாய்ப்பு உள்ளது. எனவே சிறிது விழிப்புடன் இருக்கவும்.

நீங்கள் உங்கள் துணையுடன் பிணக்கு கொள்வீர்கள். இந்தப் போக்கை தவிர்ப்பதன் மூலம் உறவில் நல்லிணக்கம் காண முடியும்.

இன்று நிதிநிலைமையில் அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும். உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள நீங்கள் சிறிது போராட வேண்டியிருக்கும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை காணப்படும் எண்ணெய் உணவு வகைகளை தவிர்த்தல் சிறந்தது.




இன்று சில தடைகளை சந்திப்பீர்கள். பொறுமையாக உங்கள் செயல்களைக் கையாளுங்கள். உணர்ச்சி வசப்படாதீர்கள். பாதுகாப்பின்மை உணர்வு கொள்ளாதீர்கள். இன்று அதிகப் பணிகள் காணப்படும். இன்று பணியில் காணப்படும் கடினமான சூழ்நிலைகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். பணப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று போதிய அளவு பணம் காணப்படாது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள இயலாது. இதனால் உங்களிடம் மகிழ்ச்சியின்மை காணப்படும்.இன்று உங்களுக்கு முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. பிரார்த்தனை மற்றும் தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று வெற்றி காண்பதற்கு சாதகமான நாள். உங்கள் ஆர்வத்தை பெருக்கும் புதிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

உங்கள் பணியில் திருப்தி காணப்படும். உங்கள் சகபணியாளர்களின் ஆதரவு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு வளரும்.

நிதிநிலைமையில் ஸ்திரத்தன்மை காணப்படும். உங்கள் நிதி நிலைமை உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். உங்களிடம் காணப்படும் உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று துடிப்பான நாளாக இருக்காது. எதிர்மறை விளைவுகளை தடுக்க பொறுமை மற்றும் எச்சரிக்கையான அணுகுமுறை தேவை. இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. சிறப்பாக செயலாற்றுவதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை தக்க வைத்துக் கொள்ள உங்கள் வார்த்தைகளில் கவனம் செலுத்துங்கள்.இதனால் இருவரிடையேயான பிணைப்பு வலுப்பெறும்.

நிதிநிலைமை எதிர்பார்த்த வகையில் காணப்படாது. பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.உரிய நேரத்தில் உணவை உட்கொள்ளவும். செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 11.08.2024




உங்கள் முயற்சிகளில் வெற்றி காண இன்று முயற்சி எடுக்க வேண்டும். உங்கள் பணிகளை நம்பிக்கையுடன் மேற்கொள்ள வேண்டும்.

பணியிடச் சூழல் சிறப்பாக செயலாற்றுவதற்கு சாதகமாக இருக்காது. உங்கள் கீழ் பணிபுரிபவர்களுடன் பிரச்சினை ஏற்படலாம்.

உங்கள் துணையிடம் சகஜமாக நடந்து கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். உற்சாகமாக இணைந்து மகிழ்ச்சியான தருணங்களை அனுபவிக்க முயல வேண்டும்.

வரவும் செலவும் இணைந்து காணப்படும். உங்கள் ஆரோக்கியத்திற்காக மேற்கொள்ளவேண்டிய செலவு குறித்த கவலை காணப்படும்.

ஆரோக்கியம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. தோள் மற்றும் கணுக்கால் வலி ஏற்படலாம்.




இன்று பக்குவமாகவும் புத்திசாலித் தனத்துடனும் சூழ்நிலையைக் கையாள வேண்டும். இந்தப் போக்கு இன்றைய வேறுபாடுகளையும். அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் நற்பலன்கள் கிடைக்கும்.

பணியிடத்தில் மிதமான பலன்களே கிடைக்கும். பணிச்சுமை உங்களுக்கு கவலையை அளிக்கும்.

தகவல் தொடர்பில் ஏற்படும் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் வேறுபாடு காணப்படும். இது உறவின் நல்லிணக்கத்தையும் மகிழ்ச்சியையும் பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை பலன் தரும் வகையில் அதிர்ஷ்டகரமாக இருக்காது. பண விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும்.கண் எரிச்சல் உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




இன்று மகிழ்ச்சியை ஏற்படுத்தும் சூழ்நிலை காணப்படும். அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் பயனளிக்கும்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும். பணியை விரும்பி மேற்கொள்வீர்கள். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். மகிழ்ச்சியாக உங்கள் பணிகளை மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். பங்கு வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் பண வரவும் லாபமும் காணப்படும்.

இன்று சிறப்பான ஆரோக்கியம் காணப்படும். நீங்கள் திடமாக இருப்பீர்கள்.




இன்று மகிழ்ச்சிகரமான வாய்ப்பு காணப்படும். மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். என்றாலும் முக்கிய முடிவுகள் எடுக்க இது உகந்த நாள் அல்ல.

உங்கள் திறமை மூலம் கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள். உங்கள் தன்னம்பிக்கை மூலம் சிறப்பாக செயலாற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் உங்கள் துணையின் நம்பிக்கைக்கு பாத்திரமாகலாம்.

இன்று பண வரவுக்கான அதிர்ஷ்டம் காணப்படுகின்றது. பூர்வீக சொத்து வகையில் பண வரவு காணப்படும். இன்று கணிசமான தொகை சேமிப்பதற்கான சாத்தியம் உள்ளது.










# யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனமானது யூனியன் கெமிஸ்ட்ஸ் உடன் கைகோர்ப்பு

இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகளை வழங்கும் நிறுவனமான யூனியன் அஷ்யூரன்ஸ், வாடிக்கையாளர்களின் நலமான வாழ்க்கையை தொடர்ந்தும் மேம்படுத்தும் தனது செயற்பாடுகளில் மற்றுமொரு அங்கமாக, 60 வருடங்களுக்கு மேலாக உயர் தரம் வாய்ந்த சுகாதாரப் பராமரிப்பு தயாரிப்புகளை வழங்குவதில் சிறப்பைக் கொண்டுள்ள, நாட்டின் முன்னணி மருந்துப் பொருள்கள் சேவை வழங்குநரான யூனியன் கெமிஸ்ட்ஸ் உடன் கைகோர்த்துள்ளது.

இந்தப் பங்காண்மையினூடாக, மருத்துவத்துடன் தொடர்புடைய செலவுகள் அதிகரித்துக் காணப்படும் கால கட்டத்தில், மருந்துப் பொருள்களை மிகவும் சிக்கனமான விலையில் பெற்றுக் கொடுப்பதற்கு யூனியன் அஷ்யூரன்ஸ் எதிர்பார்க்கின்றது.

யூனியன் அஷ்யூரன்ஸ் தனது காப்புறுதிதாரர்களுக்கு, எந்தவொரு யூனியன் கெமிஸ்ட்ஸ் மருந்தகங்களிலும், மருந்துச் சிட்டைகளுக்கான மருந்துகளை கொள்வனவு செய்யும் போது விலைக்கழிவுகளை பெற்றுக் கொடுக்க முன்வந்துள்ளது.

ஆயுள் காப்புறுதித் துறையின் பரிபூரணமான மொபைல் app ஆக கருதப்படும் நிறுவனத்தின் மொபைல் app ஆன Clicklife ஊடாகவும் இந்த விலைக்கழிவுகளை வாடிக்கையாளர்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

சௌகரியத்தை மேம்படுத்தும் வகையில், ஒவ்வொரு யூனியன் கெமிஸ்ட்ஸ் நிலைத்துக்கும் பிரத்தியேகமான WhatsApp இலக்கம் காணப்படுகின்றது. அதனூடாக, வாடிக்கையாளர்களுக்கு மருந்து சிட்டையை பதிவேற்றி தமது ஓடர்களை மேற்கொள்ளலாம்.

மேலும், யூனியன் கெமிஸ்ட்ஸ் இனால் நாடளாவிய விநியோக சேவையும் வழங்கப்படுவதுடன், வாடிக்கையாளர்களின் வாயிலுக்கு மருந்துப் பொருள்கள் விநியோகிக்கப்படுகின்றமை உறுதி செய்யப்படுகின்றது.

இந்த பிரத்தியேக அனுகூலங்களுக்கு அப்பால் சென்று, யூனியன் கெமிஸ்ட்ஸ் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் நிதிப் பாதுகாப்பு தேவைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்காக, யூனியன் அஷ்யூரன்ஸினால் ஆயுள் காப்புறுதி தீர்வுகளும் வழங்கப்படும்.

யூனியன் அஷ்யூரன்ஸ் பங்காண்மைகள் மற்றும் கூட்டாண்மை வியாபார உதவி உப தலைவர் நபீல் மில்ஹான் கருத்துத் தெரிவிக்கையில்,

“எமது வாடிக்கையாளர்களுக்கு பொருத்தமான அர்த்தமுள்ள ஆதரவை பெற்றுக் கொடுத்து அவர்களின் நலனை மேம்படுத்துவதற்கான புத்தாக்கமான வழிமுறைகளை கண்டறிவதில் யூனியன் அஷ்யூரன்ஸைச் சேர்ந்த நாம் கவனம் செலுத்துகின்றோம்.

இதனை கவனத்தில் கொண்டு, மருந்துப்பொருட்கள் விநியோகத்துறையில் கீர்த்தி நாமமான, யூனியன் கெமிஸ்ட்ஸ் உடன் கைகோர்ப்பதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். இந்த கைகோர்ப்பினூடாக, எமது காப்புறுதிதாரர்களுக்கு அத்தியாவசிய மருந்துப் பொருள்களுக்கு சௌகரியமான அணுகல் காணப்படுவது உறுதி செய்யப்படுவதுடன், பரந்தளவு ஆயுள் காப்புறுதி தீர்வுகளை வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக் கொடுத்து, பரிபூரண பராமரிப்பை பெற்றுக் கொடுப்பதற்கான எமது அர்ப்பணிப்பை மீள உறுதி செய்துள்ளோம்.” – என்றார்.

யூனியன் கெமிஸ்ட்ஸ் வியாபார மூலோபாயம் மற்றும் செயற்பாடுகள் – முகாமையாளர் ஷலிந்த ரொட்ரிகோ கருத்துத் தெரிவிக்கையில்,

“உலகத் தரம் வாய்ந்த தயாரிப்புகள் மற்றும் சேவைகளை பெற்றுக் கொடுப்பதில் சிறப்புக்கான அர்ப்பணிப்பைக் கொண்டிருக்கும் எம்மைப் போன்ற நிறுவனமான யூனியன் அஷ்யூரன்ஸ் உடன் கைகோர்ப்பதையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம்.

எமது வாடிக்கையாளர்களுக்கு பொருத்தமான ஆயுள் காப்புறுதித் தீர்வுகளை பெற்றுக் கொடுக்கும் வகையில் இந்த கைகோர்ப்பு அமைந்திருப்பதால், அவர்களுக்கு பெருமளவு மனநிம்மதி மற்றும் நிதிப் பாதுகாப்புடன் வாழ்க்கையை முன்னெடுப்பதற்கு எம்மாலான ஆதரவை பெற்றுக் கொடுக்கக்கூடியதாக இருக்கும்.”– என்றார்.







# சியபத பினான்ஸ் பி.எல்.சி. வாழைச்சேனையில் தனது 50 ஆவது கிளையைத் திறந்து வைத்தது

முன்னணி உள்நாட்டு நிதி நிறுவனமான சியபத பினான்ஸ் பி.எல்.சி. தனது 50 ஆவது கிளையை வாழைச்சேனையில் அண்மையில் திறந்து வைத்தது.

சியபத பினான்ஸ் பி.எல்.சியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஆனந்த செனவிரத்ன, பிரதம செயற்பாட்டு அதிகாரி ரஜீவ் டி சில்வா மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தினர், வாழைச்சேனை பிரதேச செயலாளர் திருமதி ரோஷினி விக்னேஸ்வரன், வாழைச்சேனை உதவி பொலிஸ் சுப்ரின்டன்ட் ஏ.எல்.எம்.ஜமீல், வாழைச்சேனை பொலிஸ் பொறுப்பதிகாரி எஸ்.எம்.ஆர்.பண்டார, வாழைச்சேனை கிராம சேவகர் கே.சுபாஷ், வாழைச்சேனை சம்பத் வங்கி சிரேஷ்ட முகாமையாளர் ஏ.என்.டேவிட் நிதர்ஷன், அரச மற்றும் தனியார் நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் முன்னிலையில் புதிய கிளையின் திறப்பு விழா இடம்பெற்றது.

“மீன்பிடி, பெருந்தோட்டம் மற்றும் புடவைக்கைத்தொழில் முதல் சுற்றுலா, விருந்தோம்பல் வரை, வாழைச்சேனை இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்கள்தொகை செறிவாக வாழும் நகரமாக, வணிக ரீதியில் வேகமாக முன்னேறியுள்ளது.

இந்த பல்துறை வணிகத் தன்மையும், அப்பகுதியில் உள்ள இயற்கை எழில் கொஞ்சும் வனப்பும், சியபதவை அதன் அதிகபட்ச திறனைக் கண்டறிய உள்ளூர் மக்களுக்கு ஊக்கமளித்துள்ளது.

‘சியபத பினான்ஸ் பி.எல்.சி, இன்று தேசத்தின் ஒவ்வொரு மூலையையும் அடைவதற்கான அதன் இலக்கில், குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் எட்டியுள்ளது.

வாழைச்சேனையில் எமது 50 ஆவது கிளை ஆரம்பிக்கப்பட்டதன் மூலம், வளர்ந்து வரும் வர்த்தக சமூகத்தினருக்கு எமது முழுமையான நிதிச் சேவைகளை வழங்குவதற்கும், எமது நிறுவனத்தின் நோக்கத்தை மெய்ப்பிக்கும் வாய்ப்பையும் வழங்கியுள்ளது. புதிய சமூகங்களை தொடர்ந்து சென்றடைவது உண்மையிலேயே பலனளிக்கும் அனுபவமாகும், மேலும் இந்த விரிவாக்க முயற்சிகளை எதிர்காலத்திலும் தொடர நாங்கள் உறுதியாக உள்ளோம்” என சியபத பினான்ஸ் பி.எல்.சி.யின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஆனந்த செனவிரத்ன தெரிவித்தார்.








# AIA இன் மிகச் சிறந்த செயற்திறனாளர்கள்

AIA இன்சூரன்ஸ் தனது AIA விற்பனை மாநாடு 2024 இனை சமீபத்தில் ஷங்ரிலா கொழும்பில் 'எவரெஸ்ட்டிற்கு அப்பால் பறப்பதற்கு சிறகுகளை விரியுங்கள்' எனும் ஊக்க மளிக்கும் கருப்பொருளுக்கு அமைவாக மிகவும் பிரமாண்டமான முறையில் ஏற்பாடு செய்து நடாத்தியிருந்தது.

இந்த கவர்ச்சிகரமான மற்றும் உற்சாகமான நிகழ்வானது ஊக்கம் மற்றும் கௌரவம் நிறைந்த சூழலில் AIA இன் மிகச்சிறந்த செயல்திறன் மிக்க வெல்த் பிளேனர்களின் மிகச்சிறந்த சாதனைகளையே பறைசாற்றியிருந்தது.

AIA இன் பிரதான நிறைவேற்று அதிகாரி சதுரி முனவீர தலைமையில் பிரதான முகவர் நிறுவன அதிகாரி சானக லியனகே, AIA நிறைவேற்றுக் குழு மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகள் ஆகியோருடன் இந்த மாநாடு இலங்கை முழுவதிலும் உள்ள அதிசிறந்த சாதனையாளர்களையே ஒன்றிணைத்திருந்தது.

மேலும் முதன்முறையாக விருதுக்காகப் பரிந்துரைக்கப்பட்ட அனைவரும் அவர்களின் சாதனைகளின் மகிழ்ச்சியான தருணங்களைப் பகிர்ந்து கொள்வதற்காக தாங்கள் பெற்றோர்களை அழைத்து வருவதற்கான சிறந்த சந்தர்ப்பம் ஒன்றினையும் AIA அவர்களுக்கென வழங்கியிருந்தது.

வாடிக்கையாளர்களுக்கு ஆரோக்கியமான, நீண்ட ஆயுளுடன் கூடிய, மிகச் சிறந்த வாழ்க்கையினை வாழ்வதற்கு உதவும் அவர்களின் மிகச் சிறந்த பங்களிப்புகளுக்காக வெல்த் பிளேனர்கள், அவர்களின் முகாமையாளர்கள், மூன்று அடுக்கு முகாமையாளர்கள் மற்றும் விநியோகப் பிரிவுத் தலைவர்கள் உட்பட பங்கேற்பாளர்கள் இதன்போது கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

இவ்வருட மாநாடானது 'எவரெஸ்ட்டிற்கு அப்பால் பறப்பதற்கு சிறகுகளை விரியுங்கள்' எனும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருப்பொருளுக்கு அமைவாக சிறப்பு மற்றும் புதுமையின் புதிய உச்சங்களை அடைவதற்கான AIA இன் உறுதிப்பாட்டையே முன்னிலைப்படுத்தியிருந்தது.

இம்மாலைப் பொழுதானது தொடர்ச்சியாக காப்புறுதி தொழில்துறைத் தரத்துக்கு அப்பால் புதிய தரநிலைகளை அமைத்து வருகின்ற AIA வெல்த் பிளேனர்களின் குறிப்பிடத்தக்க மிகச்சிறந்த சாதனைகளைப் பாராட்டிக் கௌரவித்திருந்தது.

## தேசிய வியாபார சிறப்பு விருதுகள் 2024:

# உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான விருதை SLT-MOBITEL சுவீகரிப்பு

இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன தேசிய வியாபார சிறப்பு விருதுகள் 2024 இல், பயன்பாடுகள் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி பிரிவில் இரண்டாமிடத்தை SLT-MOBITEL சுவீகரித்திருந்தது.

இந்த நிகழ்வு அண்மையில் கொழும்பு ஷங்கிரி-லா ஹோட்டலில் நடைபெற்றது.

இலங்கையின் டிஜிட்டல் முன்னேற்றத்தில் SLT-MOBITEL வகிக்கும் முக்கிய பங்கை உணர்த்துவதாக பயன்பாடுகள் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி பிரிவில் பெற்றுக் கொண்ட விருது மேலும் உணர்த்தியுள்ளது.

தேசத்தின் டிஜிட்டல் உட்கட்டமைப்பை விரிவாக்கம் செய்வதில்நிறுவனம்முக்கியபங்காற்றுவதுடன்,நாட்டின்முன்னேற்றத்துக்கு ஆதரவளிப்பதுடன், நகர மற்றும் கிராமிய மட்டங்களைச் சேர்ந்த சமூகத்தாரை இணைப்பதாகவும் அமைந்துள்ளது.

இலங்கையில் தொலைத்தொடர்பாடல்கள் மற்றும் டிஜிட்டல் சேவைகள் போன்றவற்றில் புத்தாக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு SLT-MOBITEL ஆதரவளிப்பதுடன், மேம்படுத்தப்பட்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகளினூடாக இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கின்றது.

மேலும், தேசிய அபிவிருத்திக்கான அதன் முழுமையான வழிமுறை போன்றவற்றுக்கான, நிலைபேறான மற்றும் பொறுப்பு வாய்ந்த வியாபார செயற்பாடுகளுக்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பு உறுதி செய்துள்ளதுடன், இலங்கையின் டிஜிட்டல் எதிர்காலத்தை வடிவமைக்கும் பிரதான செயற்பாட்டாளராகவும் அமைந்துள்ளது.

இந்த போட்டிகரமான சூழலில் SLT-MOBITEL இன் சாதனை என்பதும், அணியின் கடின உழைப்பு மற்றும் புத்தாக்கம் போன்றவற்றுக்கான எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

இலங்கையில் கூட்டாண்மை சிறப்பின் அடையாளமாக தேசிய வியாபார சிறப்பு விருதுகள் அமைந்திருப்பதுடன், பல்வேறு துறைகளில் வியாபாரங்களின் மதிப்பீடு செய்வதற்கான சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமங்களை கொண்டதாக அமைந்துள்ளது.

நாடு முழுவதிலும் திறமை, ஆக்கத்திறன் மற்றும் தொழில் முயற்சியாண்மை முயற்சி ஆகியவற்றை குறிக்கும் 19 ஆவது வருடமாக இந்த ஆண்டு அமைந்திருந்தது.

SLT-MOBITEL இலங்கையின் டிஜிட்டல் பயணத்துக்கு தொடர்ந்தும் தலைமைத்துவமளிக்கும் நிலையில், இந்த விருதை சுவீகரித்தமையானது, தேசத்தை இணைக்கும் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் செயற்பாடாகவும், நவீன தொழில்நுட்பம் மற்றும் சேவைகள் போன்றவற்றினூடாக தேசத்துக்கு வலுவூட்டுவதாகவும் அமைந்துள்ளது.




NGage
GOODVOCACY & PR
A part of Sri Lanka's Pioneering Integrated Marketing Communications Agency

# சமபோஷ பாடசாலை விளையாட்டுப் போட்டி; ஓகஸ்ட் 21 முதல் 5 மாகாணங்களில் ஆரம்பம்

CBL நிறுவனத்தின் உப நிறுவனமான Plenty Foods (Pvt) Limited நிறுவனத்தின் பிரதான தயாரிப்பான இந் நாட்டின் பிரபலமான தானிய உணவான சமபோஷவின் ஊட்டமளிப்பில் '2024 சமபோஷ பாடசாலை விளையாட்டுப் போட்டி' ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இவ்வருட விளையாட்டுப் போட்டிகள் வடமத்தி, வடமேல், கிழக்கு, ஊவா மற்றும் தெற்கு ஆகிய ஐந்து மாகாணங்களை மையமாகக் கொண்டு நடத்தப்படவுள்ளன.

சமபோஷவின் அனுசரணையுடன் மாகாணக் கல்வி அலுவலகங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த விளையாட்டுப் போட்டி 5 மாகாணங்களிலும் தனித் தனியான விளையாட்டுப் போட்டிகளாக ஓகஸ்ட் மாதம் முதல் செப்டெம்பர் 13 ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளது.

இதில் இடம்பெறவுள்ள 70 இற்கும் அதிகமான போட்டிகளில் 2000 இற்கும் அதிகமான பாடசாலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 18,000 இற்கும் அதிகமான வீர வீராங்கனைகள் பங்கெடுக்கவுள்ளனர்.

ஊவா மாகாணத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எச்.ஜி.சன்ன கருணாசேன இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்,

"அடிமட்டத்திலிருந்து தேசிய மட்டத்திற்கு வருவதற்கு முயற்சிக்கும் மாணவர்களை உயர்ந்த இடத்திற்குக் கொண்டுசெல்ல எமக்கு அனுசரணை வழங்கி இந்த விளையாட்டுப் போட்டியை வெற்றியைநோக்கிக் கொண்டு செல்ல சமபோஷவே முதன் முதலில் முன்வந்தது" – என்றார்.

இரண்டாவது கட்டமாக தென்மாகாண விளையாட்டுப் போட்டி ஓகஸ்ட் 27 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை மாத்தறை கோட்டவில விளையாட்டு மைதானத்தில் நடத்தப்படவுள்ளது.

மூன்றாவதாக, கிழக்கு மாகாணத்தின் விளையாட்டுப் போட்டி செப்டெம்பர் மாதம் 5ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

வடமேல் மாகாணத்தின் விளையாட்டுப் போட்டி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 7ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை குருநாகல் வெலகெதர மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இது பற்றிக் கருத்துத் தெரிவித்த வடமேல் மாகாணத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வை.எம்.எச்.கே. அபேகோன் குறிப்பிடுகையில்,

"பாடசாலை விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு புதிய தொழில்நுட்பத்தின் மூலம் அவர்களின் திறமை குறித்து மேலும் விளிப்புணர்வை ஏற்படுத்திக் கொள்ள, விளையாட்டு வீரர் என்ற ரீதியில் அபிமானத்தை ஏற்படுத்திக் கொள்ளவும், அந்த அபிமானத்தின் ஊடாக இந்நாட்டுக்குப் பெருமை சேர்க்கும் சர்வதேச மட்ட வீர வீராங்கனைகளை உருவாக்கவும் சமபோஷ வழங்கிவரும் தேசிய ஒத்துழைப்பு பாராட்டப்பட வேண்டியது."– என்றார்.

இறுதிப் போட்டியான வட மத்திய மாகாண விளையாட்டுப் போட்டி அநுராதபுரம் பொது விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரையில் நடத்தப்படவுள்ளது.

Best Workplaces
Great Place To Work.
LKA 2020
Our organisation has been recognised as a Best Workplace in Sri Lanka for 2020 by Great Place To Work ® in Sri Lanka

வெற்றிபெறும் பாடசாலைகள் மற்றும் வீர வீராங்கனைகளுக்கு, பதக்கங்கள், கேடயங்கள், சான்றிதழ்களை வழங்க மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த விளையாட்டுப் போட்டி தொடர்பில் கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளர் அதுல விஜயவர்தன குறிப்பிடுகையில்,

"பாடசாலை மாணவர்களின் திறமைகளை அதிகரித்து அவர்களின் உடல் மற்றும் உள வலிமையை மேம்படுத்துவதற்கும், அவர்களின் திறமைகளை தேசிய மட்டத்திற்குக் கொண்டு செல்வதற்குத் தேவையான பலத்தை வழங்குவதற்கு CBL சமபோஷ வழங்கும் உயர்ந்த ஒத்துழைப்பை நாம் மதிக்கின்றோம்" – என்றார்.

இதன் முதலாவது விளையாட்டுப் போட்டியான ஊவா மாகாண விளையாட்டுப் போட்டி பதுளை வின்சன்ட் டயஸ் விளையாட்டு மைதானத்தில் ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.